விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 20 வெள்ளிக்கிழமை (04.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 075

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்

100 வீத சாதாரண போட்லான்

சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## போர்க் குற்றம் குறித்து சுயாதீன விசாரணை!

## அமெ.செனட் யோசனை

(நியூயோர்க்)

**இலங்கை அரசாங்கமும், சர்வதேசமும் இறுதி யுத்தத்தின்போதும் அதன் பின்னரும் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள், சர்வதேச சட்ட மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து சுயாதீனமான விசாரணை நடத்தவேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் எஸ்.ஆர்.ஈ.எஸ்.85 என்ற சட்டமூலம் ஒன்றை அமெரிக்காவின் செனட்சபை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது. அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தின் செனட் உறுப்பினர் றொபேட் கெசேஸ்.ஜே.ஆர். இந்த யோசனையை கடந்த திங்கட்கிழமை முன்மொழிந்தார். அவருடன் 11 ஏனைய செனட் உறுப்பினர்களும் இந்த யோசனையை முன்மொழிந்தனர்.** (20ஆம் பக்கம் பார்க்க)

## பூசாவில் உள்ள அரசியல் கைதிகள் விடுதலையாவர்

(கொழும்பு)

பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலி உறுப்பினர்களை விடுதலை செய்யும் நடவடிக்கைகள் நேற்றுத் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பூசா தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களில் பாரியளவான பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டிராத சந்தேக நபர்கள் 41பேர் இனம்காணப்பட்டு நேற்று கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களில் நான்கு ஆண்கள் மற்றும் முப்பத்தேழு பெண்கள் உள்ளடங்கியிருந்தனர். நீதிமன்றத்தில் அவர்கள் அனைவரும் விசேட அனுமதியின் பெயரில் பொலிசாரினால் கூட்டாகவே ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

அதன்போது அவர்கள் தொடர்பில் சட்டமா அதிபர் சமர்ப்பித்த அறிக்கையில் நீண்டகாலமாக அவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்தமையால் புனர் (20ஆம் பக்கம் பார்க்க)

## 17 வருடங்களின் பின் மீள் குடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 500க்கு மேற்பட்ட குடும்பங்கள் 17வருடங்களின் பின் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட துண்டி, மகேந்திரபுரம், புனித புரம், எழிலூர், பிரதான வீதி கொழும்புத்துறை ஆகிய பிரதேசங்களில் மொத்தமாக 980பேர் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கிழக்கு அரியாலை, பூம்புகார் போன்ற பகுதிகளில் மொத்தமாக 120குடும்பங்களுக்கு மேலாக நேற்று மீள் குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில்பாரம்பரியகைத்தொழில்கள் மற்றும்சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.எஸ்.டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வெஸ்திரி அலெண்ரின், யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, பிரதி மேயர் இளங்கோ, யாழ்.பிரதேச செயலர் சுகுணரதி தெய்வேந்திரம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். (சு-5)

## இளம் குடும்பப் பெண் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியா தடுப்புமுகாமில் வைத்திருந்த இந்து மதகுரு ஒருவருக்கு உணவு எடுத்துச் சென்ற அவரது மனைவி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

திருகோணமலையில் வைத்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட பிரஸ்தாப மதகுரு கொழும்பில் தடுத்துவைக்கப்பட்டு புனர்வாழ்வளிப்பதற்காக வவுனியாவுக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் அவருக்கு அவரது (20ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் வளர்ச்சிக்கு ஜனநாயகமும் அவசியம்

(கொழும்பு)

ஊடக சுதந்திரமும் ஜனநாயகமும் நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதவை என இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹில்டே ஹரல்ஸ்டெட் தெரிவித்தார்.

இவற்றை உருவாக்குவதற்காக விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளில் ஊடகங்கள் ஈடுபடுவதுடன் காவல்காரர்களாகவும் செயற்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற இலங்கை இதழியல் கல்லூரியில் 2010ஆம் ஆண்டுக்கான பயிற்சி நெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் (20ஆம்பக்கம்பார்க்க)

## யாழில் இடம்பெறும் இராணுவப் பதிவை இடைநிறுத்த சட்டமா அதிபர் இணக்கம்

(கொழும்பு)

படையினரால் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பதிவு நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கான பொறுப்பை சட்டமா அதிபர் உயர் நீதிமன்றில் ஏற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வாழ்கின்ற மக்களை படைத்தரப்பினர் பதிவுசெய்வதை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த மாதம் 22 ஆம் திகதி அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தது.

சட்டத்தரணி மோகன் பாலேந்திரா மூலம் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில் எதிர் மனுதாரர்களாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, யாழ் கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துரு சிங்க, படைத்தரப்பின் குரல்தரவல்ல அதிகாரி உபய மெதவல, சட்டமா அதிபர் மற்றும் யாழ்.அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

அதேவேளை மனுதாரர்கள் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சுரேஸ் பிரேமச் சந்திரன், ஈ.சரவணபவன் மற்றும் எஸ். சிறிதரன் ஆகியோரின் பெயர்கள் இம் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தன.

யாழ். குடாநாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகத் தெரிவித்து படைத்தரப்பால் மேற்கொள் (20ஆம் பக்கம் பார்க்க)

## காலிமுகத்திடலை அரசு சீன நிறுவனத்திடம் கையளிப்பு



(கொழும்பு)

காலிமுகத்திடலை அரசாங்கம் சீன நிறுவனம் ஒன்றிற்கு 99 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

ஜனாதிபதித் (20ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் டக்ளஸ் தாக்கல் செய்த முன் பிணை மனு நிராகரிப்பு!

(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தாக்கல் செய்திருந்த முன் பிணைமனுவை சென்னை உயர்நீதி மன்றம் நேற்று நிராகரித்தது.

1986ஆம் ஆண்டு டக்ளஸ் தேவானந்தா சென்னையில் தங்கியிருந்த போது சூளைமேட்டைச்சேர்ந்த திருநாவுக்கரசு என்பவரைக் கொலை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது.

இதனையடுத்து அவர் இலங்கைக்குத் தப்பியோடி விட்டதையடுத்து அவரைத் தேடப்படும் குற்றவாளி என 1994 ஆம் ஆண்டு சென்னை நீதிமன்றம் அறிவித்தது.

இந்நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அவர் கடந்த வருடம் டில்லிக்கு விஜயம் செய்து பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்தித்திருந்தார்.

இந்தியாவில் தேடப்படும் குற்றவாளியை பிரதமர் மன்மோகன் சிங்சந்தித்தமை குறித்து அப்போது பலத்த கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டதுடன், டக்ளஸ் தேவானந் தாவைக் கைது செய்ய வேண்டும் எனவும் கோரிக்கைகள் எழுந்தன. (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## விளையாட்டுப் போட்டி


யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டிகள் நாளை சனிக்கிழமை மு.ப. 9.30மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினரர்களாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன்,வேலணை கோட்டக் கல்லூரி அதிகாரி கு.சரவணபவானந்தன்,கௌரவ விருந்தினர்களாக மனவளக்கலை துணைப் பேராசியரும், கொழும்புக்கிளை பழைய மாணவர் சங்கப் பொருளாளருமான சி.முருகானந்தாவேல்,வேலணை பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர் செல்வி பொ.ஜமுனாதேவி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

கிளிநொச்சி கல்லாறு கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் இராணுவ தரப்பினருடன் பேச்சு நடத்துவதைப் படங்களில் காணலாம்.

# மனித உரிமைக் குழுவின் 16ஆவது அமர்வில் இலங்கைக்கு நன்மைகள் கிடைக்கும் அறிகுறி

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

**ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 16ஆவது அமர்வில் இலங்கைக்கு நன்மை கிடைக்கும் அறிகுறிகள் தென்படுவதாக மனித உரிமைகள் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் வெற்றியின் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக இம் மாநாட்டின் உறுப்பினர்கள் திருப்தி கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற போர் நிறைவடைந்த பின்னர் தற்போது இடம்பெற்று வரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக இம் மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் ஆச்சரியம் அடைந்ததாக அமைச்சர் கூறியுள்ளார்.

அத்துடன் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல், இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை, பொருளாதாரம் உள்ளிட்ட மேலும் பல விடயங்கள் தொடர்பாக இம் மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் தமக்கு வாழ்த்துக்களை தெரிவித்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த விஜயத்தின் போது பல்வேறு நாடுகளின் உயர்ஸ்தானிகர்களைச் சந்தித்து இலங்கை தொடர்பாக கருத்துக்களை பரிமாறிக் கொள்ளும் சந்தர்ப்பம் தனக்கு கிடைக்கப் பெற்றதாகவும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டார். (ச-5)

## திருநெல்வேலி இ.த.க மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரட்ணம் தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகவும்,யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி ஞானசக்தி கணேசநாதன், திருநெல்வேலி தேனு களஞ்சிய உரிமையாளர் தி.ஸ்ரீமோகனறாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ந)

## அம்பாந்தோட்டை விமான நிலையத்திலிருந்து முதலாவது விமானம் 2012இல் பறக்கும்




(கொழும்பு)

அம்பாந்தோட்டை மத்தல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சர்வதேச விமான நிலையத்திலிருந்து முதலாவது விமானம் எதிர்வரும் 2012ஆம் ஆண்டு பயணிக்கும் என சிவில் விமான சேவை அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

மத்தல சர்வதேச விமான நிலையத்தில் ஓடுபாதை நிர்மாணிக்கும் முதற்கட்ட பணிகள் நேற்று காலை 10.02 அளவில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் சிவில் விமான சேவை அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன ஆகியோரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

இ ந் நி க ழ் வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.இந்த விமான நிலையத்தின் 75 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந் நிகழ்வில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, சிவில் விமான சேவை அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன, விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் பிரசன்ன விக்ரமசூரிய,சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் சில்வா மற்றும் சீன ஹாபர் பொறியியலாளர்கள் பிரிவின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

209 மில்லியன் அமெரிக்க டொலர் சீன நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்த விமான நிலையம் 75 மீற்றர் அகலமும், 3500 மீற்றர் நீளமும் கொண்டதாக அமையவுள்ளது.

இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்த விமான நிலையத்தில் உலகிலுள்ள மிக பெரிய விமானத்தையும் தரையிறக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# பொலிஸாருக்கு எதிராக இராணுவ அதிகாரி வழக்கு

(கொழும்பு)

பொலிஸார் மனிதாபிமானமற்ற வகையில் செயற்பட்டதாகத் தெரிவித்து இராணுவ லெப்டினன்ட் கேணல் ஒருவர் உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னதாக பொலிஸ் தம்மை கைது செய்ததாகவும் மனிதாபிமானமற்ற வகையில் தம்மை சித்திரவதை செய்ததாகவும் அவர் முறைப்பாடு செய்துள் ளார்.

டபிள்யூ.ஏ.ஆர்.சி.பெரேரா என்ற இராணுவ லெப்டினன்ட் கேணலே இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் பொலிஸ் தம்மை தாக்கியதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பான மருத்துவ அறிக்கையையும் அவர் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளார்.

குற்ற விசாரணை பிரிவு, பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய,பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயராஜபக்ஷ மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

குறித்த இராணுவ உயரதிகாரி 1985ஆம் ஆண்டு முதல் இராணுவத்தில் கடமையாற்றி வருவதாகவும்,தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பல முக்கிய போராட்டங்களில் பங்கேற்றுள்ளதாகவும் சட்டத்தரணி ஜே.சீ.வெலியமுன சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் 2009ஆம் ஆண்டு மே மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட லெப்டினன்ட் கேணல் பெரேரா பொலிஸாரால் கடுமையாக தாக்கப் பட்டுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணியதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எதுவித உண்மையும் கிடையாது என மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

**விற்பனைக்கு**

கட்டுமண், பூச்சு மண் 1கியுப் 11,000/= , 6X9 கருங்கல் 1 கியுப் 9,000/=, ஒரு தரமான அரிகல் 40/=, 3/4" கருங்கல் சல்லி 13,000/=, அதிகம் தேவைப்படு வோருக்கு விலைக்கழிவுண்டு. யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கும் கொடுக்கப்படும்.
தொடர்புக்கு:
0776253719
(3899)

**கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும் வணிகர்களுக்கான அறிவித்தல்**

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 19.03.2011 சனிக்கிழமை வழமைபோல நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு வியாபாரம் மேற்கொள்ளும் வணிகர்களுக்கான வியாபார நிலைய ஏல விற்பனை 06.03.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வண்ணம்
ஆலய பரிபாலன சபை
(சி-2575)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 – ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## இன்று இரண்டு லீக் ஆட்டங்கள்

## நியூ.–சிம்பாவே, மே.தீவுகள்–பங்களாதேஷ் மோதல்



(அகமதாபாத்)

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இன்று 2 லீக் ஆட்டங்கள் நடைபெறுகின்றது.

இதில் அகமதாபாத்தில் இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். தொடரின் 18 ஆவது லீக் ஆட்டத்தில் 'ஏ' பிரிவைச் சேர்ந்த நியூசிலாந்து–சிம்பாவே அணிகள் மோதுகின்றன.

நியூசிலாந்து அணிமுதல் ஆட்டத்தில் கென்ய அணியை 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டது.

எனினும் இரண்டாவது லீக் போட்டியில் அவுஸ்திரேலிய அணியிடம் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

ஐ.சி.சி. தரவரிசையில் 7 ஆவது இடத்திலுள்ள நியூசிலாந்து அணி தற்போது 2 ஆவது வெற் றியைப் பெறும் ஆர்வத்தில் உள்ளது.

சிம்பாவே அணி முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணியிடம் தோல்வியடைந்தது. இரண்டாவது ஆட்டத்தில் கனடாவை வீழ்த்தியது.

நியூசிலாந்து அணிக்கு சிம்பாவே எல்லா வகையிலும் சவால் கொடுத்து விளையாடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### மே.தீவுகள் - பங்களாதேஷ் மோதல்

இத் தொடரில் டாக்காவில் இன்று பகலிரவு ஆட்டமாக நடைபெறும் தொடரின் 19 ஆவது லீக் போட்டியில் 'பி' பிரிவைச் சேர்ந்த பங்களாதேஷ்–மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதுகின்றன.

இதில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணியிடம் தோல்வி கண்டது எனினும் 2 ஆவது ஆட்டத்தில் நெதர்லாந்து அணியை வீழ்த்தியது. இப்போட்டியில் பொல்லார்டின் அதிரடியும் ரோச்சின் வேகமும் அபாரமாகவிருந்தது.

பங்களாதேஷ் அணி ஆரம்ப ஆட்டத்தில் இந்திய அணியிடம் தோல்வியடைந்தது. 2ஆவது ஆட்டத்தில் அயர்லாந்து அணியை வென்றது.

சொந்த மண்ணில் விளையாடுவதால் பங்களாதேஷ் அணி வீரர்கள் சிறப்பாக ஆட முயற்சிப்பார்கள்.

இரு அணிகளும் 2ஆவது வெற்றியைப் பெறுவதில் ஆர்வமாக களமிறங்குகின்றன.



## போட்டி சமநிலையாகும்; வோர்ன் எப்படி கணித்தார்

### சந்தேகிக்கிறது பாக். கிரிக்கெட்சபை

இந்திய – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிவடையும் என அவுஸ்திரேலியாவின் முன்னாள் சுழற்பந்து வீச்சு நட்சத்திரமான ஷேன் வோர்ன் முன்கூட்டியே எதிர்வு கூறியமை எப்படி என்பது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி) சந்தேகம் எழுப்பியுள்ளது.

இது தொடர்பாக எதிர்வரும் ஐ.சி.சி நிறைவேற்றுச்சபைக் கூட்டத்தில் கேள்விஎழுப்பவுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் இஜாஸ் பட், லாகூரில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்திய – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டிக்கு முன்பாக டுவிட்டர் இணையத்தளத்தில் கருத்துத் தெரிவித்த ஷேன் வோர்ன் இப் போட்டி சமநிலையில் முடிவடையும் என தான் எதிர்வு கூறுவதாக குறிப்பிட்டிருந்தார்.

இப் போட்டியில் இருஅணிகளுமே 338 ஓட்டங்களைப் பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. உலகக்கிண்ணப் போட்டிகள் சமநிலையில் முடிவடைந்த 4 அவது சந்தர்ப்பம் இதுவாகும்.

பொதுவாக கிரிக்கெட் போட்டிகளில் எந்த அணி வெல்லும் என சரியாக எதிர்வு கூறுவது சாதாரணமானது. ஆனால் ஒரு போட்டி சமநிலையில் முடிவடையும் என அவர் சரியாக எதிர்வுகூறியது பலரையும் வியப்புக்குள்ளாக்கியுள்ளது.

இப்பெறுபேற்றை ஷேன் வோர்ன் சரியாக எதிர்வுகூறியமை குறித்து இங்கிலாந்து அணித் தலைவர் அன்ட்ரு ஸ்ரொரஸ் உட்பட பலர் அவருக்கு பாராட்டு தெரிவித்திருந்தனர்.

ஆனால் ஷேன் வோர்ன் இதை எப்படி முன்கூட்டியே இப் பெறுபேற்றை எதிர்வு கூறினார் என பாகிஸ்தான் கிரிக்கெட்சபை கேள்வி எழுப்புகிறது.

இப் போட்டி சமநிலையில் முடிவடையும் என அவர் எதிர்வுகூறியது மிக விசித்திரமாக இல்லையா, எதிர்வரும் ஐ.சி.சி சபைக் கூட்டத்தில் இவ்விடயம் குறித்து கேள்வி எழுப்பப்படும் என இஜாஸ் பட் தெரிவித்தார்.

போட்டிகளின்போது "ஸ்பொட் பிக்ஸிங்" எனும் ஆட்ட நிர்ணய சதி குறித்து செய்திகள் வெளிவரும் நிலையில் ஐ.சி.சி. இவ்விடயத்தில் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் இஜாஸ் பட் கூறியுள்ளார்.

இதேவேளை தற்போதைய உலகக் கிண்ணப் போட்டிகளில் ஸ்பொட் பிக்ஸிங் சதிகள் நடைபெறுகிறது என்பதில் சந்தேகமில்லை என பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சர்பராஸ் நவாஸ் கூறியுள்ளார்.


கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!

MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்

தினமும் 5 பேருக்கு

50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு

ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு

வலம்புரியில் கேட்கப்படும்

உலகக்கிண்ண கேள்விகளுக்கு

சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை பெற்றுக்கொள்ளுங்கள்

கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்

1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்ரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி


### இன்றைய கேள்வி ?

உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் அதிக சதம் அடித்த வீரர் யார்?

..........................................................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 06.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு நவகலா வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

பெயர்:- ..............................

முகவரி:- ..............................

..............................

தொ.பே:- ..............................

தே.அ.அ.இல:- ..............................

அனுப்ப வேண்டிய முகவரி: 'உலகக் கிண்ணம்' வலம்புரி இல.3,2 -ம் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

### காலிறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள் ?

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 10.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

1. ..............................
2. ..............................
3. ..............................
4. ..............................
5. ..............................
6. ..............................
7. ..............................
8. ..............................

அனுப்ப வேண்டிய முகவரி: "உலகக் கிண்ணம்" வலம்புரி இல.3,2 -ம் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................


முகவரி: ..............................

..............................

தொ.பே: ..............................

தே.அ.அ.இல: ..............................


ஒலிம்பியா ஸ்போட்ஸ் இல06,ஜும்மா பள்ளிவாசல் லேன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### உலகக்கிண்ண கிரிக்கெட்–2011

சம்பியனாகும் நாடு?..............................

தொடர் நாயகன் விருது யாருக்கு?..............................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 20.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

பெயர்..............................

முகவரி..............................

தொலைபேசி..............................

தே.அ.அ.இல..............................

'உலகக்கிண்ணம்' வலம்புரி இல.3, 2-ம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


Midea Electro Mart No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.

ESPN இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம் 52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இன்னும் பல பரிசுகள்

PCS PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD 305,Kasthuriyar Road,Jaffna. T.P.021 2221101,021 2229644 email:- pcsjaffna@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்ட போட்டிகள்

(சாவகச்சேரி)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடாத்தும் போட்டிகள் நாளை சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் கலந்து கொள்ளும் அங்கத்தவர்கள் உரிய நேரத்திற்கு வருகை தந்து ஒத்துழைக்குமாறு சங்கச் செயலாளர் திருமதி ம.கீர்த்திநாதன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-3-29)

☆☆☆☆☆☆

(யாழ்ப்பாணம்)


சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி ஆகியவை யாழ்.பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படவுள்ளன.

இதற்கமைய கட்டுரையானது 'பெண்களுக்கு விஞ்ஞானத் தொழில்நுட்பக்கல்வியின் அவசியம்', 'பெண்கள் கௌரவமான தொழிலில் ஈடுபடுதலுக்கு வழி அமைப்போம்' என்ற தலைப்பின் கீழ் இடம்பெறவுள்ளது.

அத்துடன் கவிதையானது 'எழும் ஞாயிறு', 'தீகொள்' என்ற தலைப்பின் கீழ் நடைபெறவுள்ளது.எனவே, மேற்குறித்த போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் யாழ்.பிரதேச செயலகத்திற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். இதற்கான ஆக்கங்கள் யாவும் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக பிரதேச செயலகம், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# நெல்லியடியிலுள்ள தனியார் கல்வி நிலையத்துக்கு இனந்தெரியாதோர் தீ வைப்பு



(கரவெட்டி)

வடமராட்சி நெல்லியடிப் பகுதியிலுள்ள பிரபல தனியார் கல்வி நிலைய மொன்றுக்கு இனந்தெரியாத நபர்களால் நேற்று அதிகாலை தீ வைக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி விக்னேஸ்வரா வீதியில் உள்ள மேற்படி கல்வி நிலையத்திற்கு நேற்றுஅதிகாலை ஒரு மணியளவில் தீ வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் தரம் 10 வகுப்பறை முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளது. தீயை அணைப்பதற்கு அப்பகுதி பொதுமக்கள் முயற்சித்த போதும் அதனை அணைக்க முடியவில்லை என்று குறிப்பிடப்படுகின்றது. எனினும் வகுப்பறையில் இருந்த சில தளபாடங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஸ்ரீ-3-24-19)

# பருத்தித்துறை,கரவெட்டி கோட்ட ஆங்கிலதினப் போட்டிகள்

(அல்வாய்)

பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய கோட்டமட்ட ஆங்கிலதினப் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன. இதில் தரம் 6 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கு நாளை சனிக்கிழமையும் தரம் 3 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களுக்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமையும் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் பருத்தித்துறை கோட்டத்திற்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலும் கரவெட்டிக் கோட்டத்திற்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

(ஸ்ரீ-3-19)

# செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலயத்தில் க.பொ.த உயர்தரப் பிரிவில் உயிரியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மெ.மி.த.க.பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செயலமர்விற்கு வருகைதரும் ஆசிரியர்கள் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியை தவறாது கொண்டு வருமாறு வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-3-19)

❖❖❖❖❖

வடமராட்சி வலயத்தில் தரம் 6 தொடக்கம் தரம்11 வரை பரதநடனம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/ வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.(ஸ்ரீ-3-19)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர் வீதி, பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ்விழாவில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

(ஸ்ரீ-9)

# பாம்புக்கடிக்கு இலக்கான பெண் வைத்தியசாலையில் அனுமதி

(கரவெட்டி)

வீட்டில் சமையல் வேலை செய்து கொண்டிருந்த குடும்பப் பெண்மணி ஒருவர் நாகபாம்பு தீண்டி சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு அல்வாய் மாலுசந்தியில் இடம்பெற்றது.இச்சம்பவத்தில் இரட்ண கோபால் தயாளினி வயது (38) என்ற குடும்பப் பெண்ணே பாம்புக்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகிறார்.

(ஸ்ரீ-3-24)

# கரப்பந்தாட்ட,வலைப்பந்தாட்ட போட்டிகளில் சம்பியன்

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்டப் போட்டிகளில் மணற்காடு சென் அன்ரனிஸ், தாழையடி சென்மேரிஸ் அணிகள் சம்பியனாகியுள்ளன.

மேற்படி போட்டி கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெற்றது.

பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் தாழையடி சென்மேரிஸ் அணியை வென்று மணற்காடு சென்அன்ரனிஸ் அணியும், வலைப்பந்தாட்ட போட்டியில் உடுத்துறை ஓடுமீன் அணியைவென்று தாழையடி சென்மேரிஸ் அணியும் வெற்றி பெற்று சம்பியனாகியது.

(ஸ்ரீ-3-24)




# மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதிய விபத்தில் இளைஞர் படுகாயம்

(கரவெட்டி)

அல்வாய் வடக்கு நக்கீரன் பகுதியில் மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.நக்கீரன் மைதானத்தில் சிவராத்திரி நிகழ்வைப் பார்த்துவிட்டு வீடுதிரும்பியபோது நாய் குறுக்கே ஓடியதில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியுள்ளது.

இச்சம்பவத்தில் கரவெட்டி தெற்கு மத்தோனி பகுதியைச் சேர்ந்த இரத்தினநாதன் செந்தூரன் வயது (24) என்ற இளைஞனே காலிலும் முதுகிலும் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

(ஸ்ரீ-3-24)



சர்வதேச நாணயங்களின் கண்காட்சி நேற்று யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்றது.இதில் இப்பாடசாலையின் அதிபர் ஜே.ஞானப்பொன்ராசா நாடாவெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும் நாணயங்கள் தொடர்பான விளக்கங்களை இந்தியப் பேராசிரியரும் கண்காட்சி ஒருங்கமைப்பாளருமான எஸ்.எஸ்.அந்தோனிசாமி வழங்குவதையும் கண்காட்சியைப் பார்வையிடும் மாணவர்களையும் நாணயங்கள் தொடர்பான வினாக்களுக்கு விடையளித்த மாணவன் ஒருவனுக்கு பாடசாலை அதிபர் பரிசில் வழங்குவதையும் படத்தில் காணலாம். (படங்கள்:எஸ்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யா/வதிரி வடக்கு மெ.மி. த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் வடமராட்சிக் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.செல்வக்குமரன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து சான்றிதழ்களை வழங்கு வதனையும் பிரதம விருந்தினரின் பாரியார் மதிவதனி மாணவர் களுக்கு வெற்றிக் கேடயம் வழங்கு வதனையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- பருத்தித்துறை செய்தியாளர்)

# சப்ரகமுவ பல்கலைக்கழகம் காலவரையின்றி மூடப்பட்டது

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகம் காலவரை யறையின்றி நேற்று முதல் மூடப்பட்டதாக பல்கலையின் உபவேந்தர் கலாநூரி மஹிந்த ரூபசிங்க தெரிவித்தார்.

இந்நிலையில் பல்கலைக்கழக விடுதி களில் தங்கியுள்ள மாணவர்களை நேற்று காலை வெளியேறுமாறு அறிவிக் கப்பட்டுள் ளதாக அவர் குறிப்பிட்டார்.

பகிடிவதையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் பல்கலைக்கழக மாண வர்கள் 58 பேரு க்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நட வடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து குறித்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் வகுப்பு பகிஷ் கரிப் பில் ஈடுபட்டு வந்த நிலையிலேயே பல் கலைக்கழகம் காலவரையறை யின்றி மூடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இதுவரை 3 இலட்சத்து 8 ஆயிரத்து 900 கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன

(கொழும்பு)

கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதுவரை 3 இலட்சத்து 8 ஆயிரத்து 900 கண்ணிவெடி கள் அகற்றப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இல ங்கை இராணுவத்தின் வெளியகப் பொறி யியல் படைப்பிரிவினர் இதுவரை3 இலட்ச த்து 8 ஆயிரத்து 900 மிதிவெடிகளை அக ற்றி சுமார் 3 ஆயிரத்து 800 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தை பாதுகாப்பான நிலைக் குக் கொண்டு வந்துள்ளனர்.

யாழ்ப்பாணம்,மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்கள ப்பு, பொலநறுவை, வவுனியா ஆகிய மாவ ட்டங்களில் நிலக்கண்ணிவெடிகளை அகற் றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக இரா ணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்தார்.

நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் இந்தப் பணியில் பல தரப்பட்ட அரச சார்பற்ற அமைப்புகளும் உள்ளூர் நிறுவனங்களும் ஒன்றிணைந்து இராணுவத்தினருக்கு கண் ணிவெடிகளை அகற்றுவதற்கு பூரணஒத்து ழைப்பை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களிலேயே இந்தத் தரைக் கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் இடம்பெறுகின்றன.

இப்போது ஒட்டுசுட்டானில் இருந்து நெடுங் கேணி வரை இராணுவத்தினரால் தரைக் கண்ணி வெடிகள் முற்றாக அகற்றப்பட் டுள்ளன.

தற்போது கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் மன்னார், கிளிநொச்சி, கொக்கா வில் மற்றும் முகமாலை தொடக்கம் பரந்தன் வரையிலும் உள்ள பிரதேசங்களிலும் மேற் கொள்ளப்படுகின்றன. (ஸ்ரீ-2)

# வடபகுதியிலுள்ள பொலிஸ் நிலையங்களில் வரவேற்பாளர்களாக தமிழ்ப் பெண் பொலிஸார்

(கொழும்பு)

வட பிராந்தியத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் வரவேற்பாளர்களாக தமிழ் பெண் பொலிஸார் நியமிக்கப்பட்டுள் ளனர். இவர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு வரும் மக்களை வரவேற்று அவர்களது பிரச் சினைகளை விசாரித்து சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிமுகம் செய்து வைக்கின்றனர்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் பொலிஸ் நிலையங்களில் தமிழ்மொழி நடை முறைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. தற்போது எல்லா பொலிஸ் நிலையங்க ளிலும் தமிழ்மொழியில் முறைப்பாடுகளை பதிவு செய்ய வசதி செய்யப்பட்டிருப்பதுடன் முறைப்பாட்டுப் பிரதியும் தமிழிலேயே வழங் கப்பட்டு வருகின்றது.

சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் பொலிஸாரே பெயர்களை பதிவு செய்யும் பணிக்கு நியமிக்கப்பட்டுள்ளதால் பொலிஸ் நிலையங்களுக்கு வரும் மக்களின் தொகை யும் அதிகரித்திருப்பதாக யாழ்ப்பாண பிராந் திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நெவில் பத்மதேவ தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இடம்பெயர் மக்கள் 21 ஆயிரம் பேர் வாக்களிக்க முடியாத நிலையில்

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

செட்டிக்குளம் நலன்புரி நிலையத்தி லுள்ள 18 ஆயிரம் இடம்பெயர் மக்களுக்கும் புத்தளம் மாவட்டத்திலுள்ள 3 ஆயிரம் இடம் பெயர் மக்களுக்கும் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கான சந் தர்ப்பம் கிடைக்காமல் போகலாமென நீதி யானதும் நியாயமானதுமான தேர்தலுக் கான மக்கள் இயக்கமான பவ்ரல் தெரிவித் துள்ளது.

தேர்தல் ஆணையாளர் மற்றும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தின் போது இது உறுதிப்படுத்தப்பட்ட தாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார்.

இந்த மக்களின் வாக்களிக்கும் உரி மையை உறுதி செய்வதற்கான ஏற்பாடு உள் ளூராட்சி மன்ற தேர்தல்கள் தொடர்பான சட் டங்களில் இல்லையென இக்கூட்டத்தில் தேர்தல் ஆணையாளரால் தெரிவிக்கப்பட்ட தாகவும் ரோஹன ஹெட்டியாராச்சி தெரி வித்தார். (ஸ்ரீ-2)

# ஊர்காவற்றுறையில் நண்டு வளர்ப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் மற்றுமொரு அபிவிருத்தி திட்டப்பணியாக ஊர்காவற்றுறையில் ஆரம் பிக்கப்பட்டுள்ள நண்டு வளர்ப்புத் திட்டத்திற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 2 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளார்.

இந்த செயற்றிட்டத்தின் ஊடாக அப்பகுதி யைச் சேர்ந்த அதிகளவான இளைஞர், யுவ திகள் வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள் ளக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை கரம்பன் கண்ணகை யம்மன் கோயிலுக்கு அண்மையாக நடை பெற்ற இத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில்,

அடிக்கல்லினை ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க. கமலேந்திரன் நாட்டி வைத்தார். (ஸ்ரீ-2)

Flex Travels வழங்கும் FREE AIR TICKET உடன்
IELTS இன்றி
Spot Admissions
மூலம் UK இல்
உயர் கல்வி



West End College London
திகதி : 26th March 2011
இடம் : 4, IBC Road, Colombo 6.
நேரம் : 10.00am to 4.00pm
VISA பெற்றுக்கொள்ளும் முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
எமது சேவை முற்றிலும் இலவசம்
For appointment please contact :
0777-761346
0775-952607
4, IBC Road, Wellawatte, Colombo 6.
flex Institute
Step Towards a Bright Future
(A Subsidiary of Flex Graphic)
E-mails> flexinstitute@sltnet.lk
kiru@flexinstitute.lk
ashwinee@flexinstitute.lk
Web: www.flexinstitute.lk
FLEX Graphic

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## தியானம் செய்யும் மாயம்

வயதான பெரியவர் ஒருத்தர் தன்னுடைய 9 வயது மகனை (குருட்ஜீப்) அழைத்தார்.

"மகனே, உனக்காக இந்த உலகப் பொருட்கள் எதையும் நான் விட்டுட்டுப் போகவில்லை. ஆனாலும் நான் உன்னிடம் சொல்வதற்கு ஒரு முக்கியமான செய்தி இருக்கிறது. அதைத்தான் நான் உன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

அது என்னுடைய அப்பா, அவருடைய கடைசிக் காலத்தில் என்னிடம் ஒப்படைத்துவிட்டுப் போன செய்தி.

வாழ்க்கையில் அது எனக்கு மிகவும் உபயோகப்பட்ட ஒரு கருத்து. என்னுடைய அப்பா என்னிடம் கொடுத்த பொக்கிஷம் அது. அதை இப்பொழுது நான் உன்னிடம் கொடுக்கிறேன். இப்பொழுது உனக்கு இது புரியாது.

ஏனெனில் இன்னும் நீ பெரிய மனிதன் ஆகவில்லை.

ஆனாலும் இப்பொழுது நான் உன்னிடம் கொடுப்பதை நீ பத்திரமாக வைத்திரு. பிற்காலத்தில் அது மிகவும் உபயோகப்படும்.

இது ஒரு திறவுகோல் மாதிரி. பெரிய பெரிய பொக்கிஷங்களின் கதவுகளை இது திறந்துவிடும்" என்று விடயத்தைச் சொன்னார்.

மகனுக்கு அப்பொழுது விடயம் புரியவில்லை.

ஆனாலும் பிற்காலத்தில் அதுதான் அவருடைய வாழ்க்கையை மாற்றியமைத்தது.

சரி, அப்பா சொன்ன செய்தி என்ன?

அது ஒன்றும் பெரிய விடயமல்ல. எளிமையான ஒரு கருத்துத்தான்.

"மகனே, யாராவது உன்னை மனம் நோகும்படி செய்தால் அதைப் பற்றி 24 மணிநேரத்திற்கு தியானம் செய்யப் போவதாகவும் அதன் பின் பதில் சொல்வதாகவும் சொல்லிவிடு. அவ்வளவுதான்" என்றார்.

யாராவது நம்மைத் திட்டினால் உடனடியாகப் பதில் சொல்லக் கூடாது.

"இரு... இதைப் பற்றி யோசிக்கிறேன். இதற்கு நாளைக்குப் பதில் சொல்கிறேன்" என்று சொல்லிவிட வேண்டும். அவ்வளவுதான்.

சிறிய வயதில் இது என்ன அப்பேற்பட்ட ஒரு பெரிய இரகசியமா என்றுதான் தோன்றும்.

அந்தப் பையனுக்கும் அப்படித்தான் தோன்றியது.

ஆனாலும் அப்பா சொன்ன கடைசி வாசகம் அது என்பதால் அது அப்படியே அவர் மனதில் பதிந்துவிட்டது.

அந்த இளைஞர் ஒரு பெரியவரானார்.

அவரை ஒருத்தர் அவமானப்படுத்தினார்.

உடனே இவர் சொன்னார்:

"ஐயா, இதைப்பற்றி நான் 24 மணிநேரம் தியானிக்க வேண்டும். அப்படித்தான் என் அப்பா எனக்குச் சொன்னார். அவர் இப்பொழுது இல்லை. அவரது பேச்சுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டியது என் கடமை. தயவுசெய்து மன்னியுங்கள். 24 மணிநேரம் பொறுத்து திரும்பிவந்து உங்களுக்குப் பதில் சொல்கிறேன்" என்றார்.

அவர் தியானம் பண்ணினார். அது அவருக்குள் சில தெளிவுகளை ஏற்படுத்தியது. சில நேரங்களில் அந்த அவமதிப்பு சரிதான் என்றுகூடத் தோன்றியது.

மறுநாள் அந்த ஆளிடம் போனார்.

"ஐயா, நன்றி. நீங்கள் சொன்னது சரிதான். அது ஒரு அவமதிப்பு அல்ல. உண்மையான பேச்சுத்தான். நீங்கள் என்னை முட்டாள் என்று சொன்னீர்கள். யோசித்துப் பார்க்கும் போது அது சரி என்றுதான் தோன்றுகிறது. நான் அப்படித்தான் இருக்கிறேன்" என்றார்.

சிலசமயம் இதுமாதிரி யோசிக்கும் போது அந்த அவமதிப்பு பொய் என்று புரியும். ஆகவே பொய் எனும் போது அதற்காக நாம் ஏன் மனம் புண்பட வேண்டும் என்று நினைப்பார்.

அது மட்டுமல்ல; அது ஒரு பொய் என்று சொல்வதற்குக் கூட அந்த ஆளிடம் போகமாட்டார்.

பொய் என்றால் அது பொய்தானே. அதற்காக ஏன் கவலைப்பட வேண்டும்?

அவதானித்தல் மற்றும் தியானம் மூலமாக மெல்ல மெல்ல மற்றவர்களின் செயல்களை விடவும் தன் எதிர்வினைகளின் மீதுதான் அளவுகடந்த விழிப்புணர்வு கொண்டவராக மாறினார் என்கிறார் ஓஷோ. தியானம் என்பது ஒரு எளிதான புரிந்துகொள்ளல் மட்டும் தான் என்கிறார் அவர்.

மௌனமாக உட்கார்ந்திருப்பதல்ல தியானம்.

மந்திரத்தை ஓதிக் கொண்டிருப்பதல்ல தியானம்.

மனதின் நுண்ணிய வேலைத்தளங்களைப் புரிந்துகொள்வது தான் தியானம். அப்படிப் புரிந்துகொள்ளும் போது நமக்குள் ஒரு மாபெரும் விழிப்புணர்வு பிறக்கிறது.

அது மனதிலிருந்து பிறப்பதில்லை.

ஆன்மாவிலிருந்து பேரறிவிலிருந்து பிறக்கிறது.

இதுதான் பெரியவர்கள் சொல்லியிருக்கும் முக்கிய கருத்து.

இந்தக் காலத்திலும் ஒரு அப்பா இருந்தார்.

கடைசிக் காலத்தில் மகனைக் கூப்பிட்டார்.

"மகனே உனக்காக நான் விட்டுவிட்டுப் போவது இந்தப் பெட்டி தான். இது எங்கள் அப்பா என்னிடம் ஒப்படைத்து விட்டுப்போனது. இதை உன்னிடம் ஒப்படைக்கின்றேன்.

நான் இந்த உலகத்தை விட்டுப் போனபின் இதைத் திறந்து பார். இந்தா அதற்கான திறவுகோல்" என்று கொடுத்துவிட்டு கண்ணை மூடிவிட்டார்.

சிறிது நாட்கள் கழித்துப் பெட்டியைத் திறந்து பார்த்தார்.

பெட்டியில் இருந்தது என்ன தெரியுமா?

நம் குடும்பத்துக்காக தாத்தா காலத்திலிருந்து யார் யாரிடம் எவ்வளவு கடன் வாங்கியிருக்கிறோம் என்ற விபரப்பட்டியல்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# உணவு நஞ்சானதால் 20 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

உணவு நஞ்சானதால் வெல்லவாயா பிரதேசத்திலுள்ள மலட்டவல தேசியப் பாடசாலையைச் சேர்ந்த 20 மாணவர்கள் நேற்று காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இம்மாணவர்களுக்கு நண்பகல் வேளை உணவாக சோறும் பருப்புக்கறியும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலையில் இலவசமாக நண்பகல் வேளையில் வழங்கப்பட்ட உணவை உட்கொண்ட பின்னர் 20 மாணவர்கள் சுகவீனமுற்ற நிலையில் வெல்லவாய மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இம்மாணவர்கள் வயிற்றுவலிக்கு உள்ளானதாகவும் இருப்பினும் அவர்கள் தற்போது ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டதாகவும் வெல்லவாய மாவட்ட வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை பொது சுகாதார அதிகாரியொருவரின் கண்காணிப்பிலேயே நண்பகல் வேளைக்கான உணவு தயாரிக்கப்பட்டதாக வெல்லவாய வலயக் கல்வித் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பொது சுகாதார அறிக்கை கிடைத்ததும் விசாரணை மேற்கொள்ளப்படும் எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் மாணவர்களுக்குத் தரமான உணவே வழங்கப்பட்டதாக அப்பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையால் காண்பியக்கலை தொடர்பான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ்மொழி மூலமாக கலை வரலாற்றை கற்பிக்கும் முன்னோடித்துறையான யாழ்.பல்கலைக்கழகத்து நுண்கலைத் துறை கலை வரலாற்றுக் கற்பித்தலில் 25 வருடத்தினைப் பூர்த்தி செய்துள்ளது.

இதன் 25 வருடப் பூர்த்தியின் ஓர் அங்கமாக இலங்கைக் கலை வரலாற்றை பற்றி மீள் சிந்தித்தல் எனும் தலைப்பிலான தேசிய மட்ட ஆய்வரங்கினை நாளை சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பல்கலைக்கழக புதிய கலைப் பீட கட்டடத் தொகுதியில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இக்கருத்தரங்கில் இலங்கையின் முக்கியமான கலை வரலாற்று ஆசிரியர்களும் சமூகவியலாளர்களும் மானிடவியலாளர்களும் இலங்கை காண்பியக்கலை தொடர்பான உரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

ஆர்வமுடையோர் மேற்குறித்த தினத்தில் தம்மைப் பதிவு செய்வதன் மூலம் கருத்தரங்கில் பங்கு கொள்ளலாம் என்றும் கலை- காண்பியக்கலை ஆய்வாளர்கள், ஆர்வலர்கள், சித்திரபாட ஆசிரியர்கள் முதலியோர் இக்கருத்தரங்கில் பங்கு கொள்வதன் மூலம் அதிக பயனைப் பெறமுடியும் என நுண்கலைத்துறை தலைவர் கலாநிதி ஏ.என்.கிருஷ்ணவேணி தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-9)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | மருதனார்மடம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 210 | 250 | 220 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 220 | 250 | 250 |
| தக்காளி | 120 | 140 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 110 | 100 | 110 |
| கரட் | 140 | 150 | 140 |
| பூசணி | 70 | 70 | 70 |
| புடோல் | 70 | 80 | - |
| வாழைக்காய் | 40-50 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 60-100 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 85 | 70 | 100 |
| பாகற்காய் | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 140 | 120 |
| கருணைக் கிழங்கு | - | 80 | - |
| பயற்றங்காய் | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 120 | 150 | 150 |
| பீற்றூட் | - | 80 | 80 |
| கறிமிளகாய் | - | 200 | - |
| முருங்கைக்காய் | - | 600 | - |
| போஞ்சி | 120 | 150 | 120 |
| கத்தரி (தும்புள்ள) | 100 | 200 | 200 |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 10 |
| தேசிக்காய் | 50 | 20 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 30-60 |

# இராசி பலன்

*04.03.2011*
*(மாசி 20, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம்: காலை 6.24 மணிக்கு*
*அமாவசை: பின்னிரவு 2.40 மணிவரை*
*சதயம்: பின்னிரவு 2.46 மணிவரை*
*இராகுகாலம்: 10.56-12.26 மணிவரை*
*சுபநேரம்: 6.26-7.56 மணிவரை*
*அமாவாசை விரதம்*

**மேடம்** வருமானம் அதிகரிக்கும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், ஆச்சரியமான செய்திகள் வந்துசேரலாம்.

**இடபம்** அரசு வழிச் சலுகை எதிர்பார்த்தபடியே கிடைக்கும், இல்லத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான சூழ்நிலை அமையலாம், உற்சாகமான நாள்.

**மிதுனம்** கூட்டுத் தொழிலால் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், பூர்வீகச் சொத்துத் தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும், வழிபாடு மகத்துவம் தரும்.

**கடகம்** பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை காணவேண்டிய நாள், உதவி செய்வதாகக் கூறிய உறவினர் உங்களை விட்டு விலகுவர், சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும்.

**சிங்கம்** இனசன தொடர்புகளால் உள்ளம் மகிழும் நாள், கனவு பலிதமுண்டு, நினைத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும், தெய்வசிந்தை மேலோங்கும் நாள்.

**கன்னி** பகைவர்கள் உங்களை விட்டுவிலகுவர், தொழிலில் புதிய திட்டங்களை வகுத்து வளர்ச்சி காண்பீர்கள், பெரியோர் உங்களுக்கு உதவி செய்வர், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**துலாம்** எண்ணியவை எளிதில் நிறைவேறும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் சிறு ஆதாயம் கிடைக்கலாம்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி நகரும் நாள், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு** பொருளாதார நிலை உயரும், செல்வாக்கு மேலோங்கும், செய்தொழிலில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள், தெய்வ தரிசனமுண்டு.

**மகரம்** காணாமற் போன பொருளொன்று மீண்டும் கைக்குக் கிடைக்கலாம், தொழில் வளர்ச்சிக்காகப் பாடுபடுவீர்கள், கடின வார்த்தைகளைப் பயன்படுத்தும் நிலை அமையலாம்.


**கும்பம்** கோயில் வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள், மறக்க முடியாத சம்பவமொன்று நடைபெறலாம், தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**மீனம்** தேகநலன்கள் பாதிக்கப்படலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் மனச்சஞ்சலம் ஏற்படலாம், சயனசுகக்குறைவுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு இராணுவத்தினரால் வாழ்வாதார உதவிகள் நேற்று முன்தினம் சிவில் விவகார மற்றும் பொதுசன உறவுகள் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. இதில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க பயனாளி ஒருவருக்கு கால்நடையினை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.கரன்)

# விவசாயிகளுக்கு இணையத்தளத்தின் ஊடான சான்றிதழ் பயிற்சிநெறி

(கொழும்பு)

விவசாயிகளுக்கு இணையத்தளத்தின் ஊடான சான்றிதழ் பயிற்சிநெறியொன்றை தமிழ்மொழி மூலம் கொழும்பு பல்கலைக்கழகம் ஆரம்பிக்கவுள்ளது.

இதுபோன்ற பயிற்சிநெறி ஏற்கனவே சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு தொகுதி மாணவர்களுக்கான பயிற்சி நிறைவு செய்யப்பட்டுள்ளன. மூன்றாவது தொகுதிக்கான மாணவர்கள் விரைவில் சேர்க்கப்படவுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஷனிக்காஹிரிம்புறேகம தெரிவித்துள்ளார்.

இந்த ஒவ்வொரு தொகுதியிலும் 100 பேர் மாத்திரம் அனுமதிப்படவுள்ளதுடன் இப்பயிற்சி நெறியின் நோக்கம் விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதே தவிர தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுப்பதல்ல என அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# தென்னைமரத்திலிருந்து தவறி வீழ்ந்து இளைஞர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் அண்ணாசிலையடிப் பகுதியில் தென்னை மரத்திலிருந்து தவறிவீழ்ந்து இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு இடம்பெற்றுள்ளது.இச்சம்பவத்தில் சுபாஸ் குடியிருப்பைச் சேர்ந்த கந்தையா சுரேஸ்குமார் (வயது-32) என்ற இளைஞனே படுகாயமடைந்து அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். (ஸ்ரீ-3-30)

# கோப்பாய் சனசமூக நிலையத்திற்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஸ்ரீ காளியம்பாள் சனசமூக நிலையப் புனரமைப்புக்கென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஒரு இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளார்.

கோப்பாய் மத்தியில் அமையப் பெற்றுள்ள இந்த சனசமூக நிலையம் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருந்து வந்தது.

அண்மையில் அமைச்சர் கோப்பாய் மத்திக்கு விஜயம் மேற்கொண்ட போது குறிப்பிட்ட சனசமூக நிலையத்தை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனைக் கவனத்தில் கொண்டதன் பிரகாரம் சனசமூக நிலையத்தை புனரமைத்து மக்கள் பயன்பாட்டுக்கு உதவும் வகையில் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான காசோலையை அமைச்சர் அதன் தலைவர் ரமேஷிடம் நேற்று முன்தினம் கையளித்தார். (ஸ்ரீ)

# கிளிநொச்சி-யாழ். மாலைநேர பஸ்சேவையின்மையால் சிரமம்

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மாலை வேளையில் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படாததால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மாலை 4.30 மணிக்குப் பின்னர் தனியார் பேருந்துகள் எவையும் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை.

இதனால் உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் யாழ்ப்பாணத்திற்கான பயணங்களை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் தென்பகுதியில் இருந்து வரும் பேருந்துகளில் மிதிபலகையில் நின்றே பயணிக்க வேண்டிய நிலை காணப்படுவதுடன் அதிக சன நெருக்கடி காரணமாக சில பேருந்துகள் பொதுமக்களை ஏற்றாமலும் செல்கின்றன.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய கவனம் செலுத்திச் செயற்படுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-3-30)

# 2011.03 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1275 - சீன வானியலாளர்கள் முழுமையான சூரிய கிரகணத்தை அவதானித்தனர்.

★ 1351 - சியாமின் மன்னராக ராமாதிபோதி முடி சூடினார்.

★ 1493 - கடலோடி கொலம்பஸ் அமெரிக்காவுக்கான பயணத்தை முடித்துக் கொண்டு லிஸ்பன் திரும்பினார்.

★ 1519 - ஹேர்னான் சோர்ட்டேஸ் மெக்சிகோவில் தரையிறங்கினான்.

★ 1665 - இங்கிலாந்து மன்னன் இரண்டாம் சார்ள்ஸ் நெதர்லாந்து மீது போரை அறிவித்தான்.

★ 1793 - பிரெஞ்சுப் படைகள் நெதர்லாந்தின் கீர்ட்ரூடென்பேர்க் நகரைக் கைப்பற்றினர்.

★ 1810 - பிரெஞ்சு இராணுவம் போர்த்துக்கல்லில் இருந்து விரட்டப்பட்டது.

★ 1813 - நெப்போலியனுடன் போரிட்ட ரஷ்யப் படைகள் ஜேர்மனியின் பேர்லின் நகரை அடைந்தனர். பிரெஞ்சுப் படைகள் எதிர்ப்பேதும் இன்றி நகரை விட்டு வெளியேறினர்.

★ 1877 - எமிலி பேர்லீனர் மைக்ரோபோனைக் கண்டுபிடித்தார்.

★ 1877 - பியோத்தர் சாய்க்கொவ்ஸ்கியின் ஸ்வான் லேக் பலே நடனம் மொஸ்கோவில் முதற் தடவையாக மேடையேறியது.

★ 1882 - பிரித்தானியாவின் முதலாவது மின்சார டிராம் வண்டி கிழக்கு லண்டனில் ஓடவிடப்பட்டது.

★ 1894 - ஷங்காயில் ஏற்பட்ட பெரும் தீயில் ஆயிரக்கணக்கான கட்டடங்கள் எரிந்து சாம்பலாயின.

★ 1899 - குயின்ஸ்லாந்தில் இடம்பெற்ற பெரும் சூறாவளியினால் 300 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

★ 1908 - ஒகைய்யோவில் பாடசாலை ஒன்று தீப்பற்றியதில் 174 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1917 - ரஷ்யாவில் பெப்ரவரி புரட்சி வெற்றி பெற்றது.

★ 1931 - இந்தியாவில் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் மக்களின் அடிமட்டத்தினர் அனைவரும் உப்பை கட்டுப்பாடு ஏதுமின்றி பயன்படுத்தவும் பிரித்தானியாவின் ஆளுநர் எட்வர்ட் வூட் மற்றும் மகாத்மா காந்தி ஆகியோருக்கிடையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: பின்லாந்து நாசி ஜேர்மனி மீது போரைத் தொடுத்தது.

★ 1945 - எலிசபெத் இளவரசி (பின்னர் மகாராணியானவர்) இராணுவத்தில் வாகன செலுத்துநராக இணைந்தார்.

★ 1959 - ஐக்கிய அமெரிக்காவின் பயனியர் 4 உலகின் இரண்டாவது (அமெரிக்காவின் முதலாவது) செயற்கைக் கோள் ஆனது.

★ 1977 - ருமேனியா தலைநகர் புகாறெஸ்ட்டில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் ஆயிரத்து 570 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1994 - கொலம்பியா 16 விண்ணோடம் ஏவப்பட்டது.

★ 2001 - லண்டனில் பிபிசி தொலைக்காட்சி நிறுவனத்தின் முன்னால் இடம்பெற்ற பெரும் குண்டுவெடிப்பினால் 11 பேர் காயமடைந்தனர்.

★ 2001 - போர்த்துக்கலில் பாலம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 70 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006 - பயனியர் 10 விண்கலத்துடன் மேற்கொள்ளப்பட்ட கடைசித் தொடர்பு தோல்வியில் முடிந்தது.

★ 2006 - அசாம் மாநிலத்தின் பெயர் அசோம் என மாற்றப்பட்டது.

## பிறப்புகள்

★ 1938 - அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் (இ. 2006)

★ 1947 - தெ.நித்தியகீர்த்தி, ஈழத்து, அவுஸ்திரேலிய எழுத்தாளர் (இ. 2009)

## இறப்புகள்

★ 1193 - சலாடீன், துருக்கிய சுல்தான் (பி. 1137)

★ 1941 - லூட்விக் குயிட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1858)

★ 1952 - சார்ள்ஸ் ஷெரிங்டன், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1857)



**1980 - றொபேட் முகாபே சிம்பாவேயின் முதலாவது கறுப்பின பிரதமரானார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை மாற்றத்திற்கு ஏற்றவகையில் விவசாய நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டம்

(கொழும்பு)

காலநிலை மாற்றங்களை கருத்திற் கொண்டு விவசாய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட உள்ளதாக அரசாங்கம் அறி வித்துள்ளது.

உலகக் காலநிலை மாற்ற சவால்களை எதிர்நோக்கக்கூடிய வகையில் விவசாய நட வடிக்கைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என குறிப்பிடப்படுகிறது.

புதிய நெல்வகைகள் மற்றும் விவசாய முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட உள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இயற்கையான முறையில் விவசாய நட வடிக்கைகளை மேற்கொள்வது போன்றன குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளது.

காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற வகையி லான விவசாய நடவடிக்கைகளை மேற்கொள் வது குறித்து அண்மையில் விவசாய அமைச் சில் விசேட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

அதிகளவில் வெள்ள அனர்த்தம் ஏற்படும் பங்களாதேஷ் போன்ற நாடுகளில் புதிய தொழில்நுட்பத்திலான விவசாய நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக் கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# முக்கிய அமைச்சர் ஒருவருக்கு அமெரிக்க விசா மறுப்பு

முக்கிய அமைச்சர் ஒருவர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அமெரிக்கப் பயணத்துக் கான விசா வழங்குவதற்கு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மறுப்புத் தெரிவித் துள்ளது.

அமெரிக்காவில் நடைபெறவுள்ள பிர சித்தி பெற்ற ஆணழகன் போட்டியான ஆர் னோல்ட் கிளாசிக்ஸ் ஆணழகன் போட்டியில் பங்குபற்றுமாறு இலங்கையின் முன்னணி ஆணழகன் பிரசன்ன பீரிசுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற மிஸ்டர் வேர்ல்ட் ஆணழகன் போட்டியில் பிரசன்ன பீரிஸ் வெற்றிவாகை சூடியிருந்த தன் காரணமாகவே அவருக்கு போட்டி ஏற் பாட்டாளர்களிடமிருந்து அந்த அழைப்பு விடுக் கப்பட்டிருந்தது.

ஆயினும் அதனைச் சாட்டாக வைத்து அமைச்சர் ஒருவர் மற்றும் விளையாட்டுத் திணைக்களத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவொன்று அமெரிக்காவில் சுற்றுப் பயணமொன்றை மேற்கொள்ளும் நோக்கில் விசாவுக்கு விண்ணப்பித்திருந்தது. அதற் கென விளையாட்டமைச்சின் அனுமதிக் கடித மும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் விசா தொடர்பான நேர்முகத் தேர்வின் போது ஏற்பட்ட சந்தேகம் காரண மாக அமெரிக்கத் தூதரகம் அமைச்சர் உள் ளிட்ட அனைவருக்கும் விசா விண்ணப்பத்தை நிராகரித்துள்ளது. (ஸ்ரீ-2)

# மெய்வல்லுநர் போட்டிகள்

யா/ மட்டுவில் கமலாசினி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள் ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் எஸ். பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் யாழ். அலுவலக தலைமை அதிகாரி மாட்டின் ஸ்ருடர் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலய ஆங்கிலபாட உதவிக் கல்விப் பணிப் பாளர் வி. சிறிதரன், தென்மராட்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ரி. சிவகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள் ளனர். (ஸ்ரீ-3)

❖❖❖❖❖

யா/வயாவிளான் மத்திய மகா வித்தியால யத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாட சாலை அதிபர் கே.கனகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த கத்துருசிங்க கலந்து சிறப்பிக்கவுள் ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ராஜேந்திரன், தெல் லிப்பளைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலாயநாதன் ஆகியோர் கலந்து சிறப் பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக டி.எவ்.சி.சி. வங்கி யின் முகாமையாளர் வி.ஞானோதரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3)

❖❖❖❖❖

யா/இருபாலை சீ.சீ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் பாடசாலை முதல்வர் திருமதி கமலாவதி சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன், கௌரவ விருந்தினர்களாக ஈழமக்கள் ஜன நாயகக் கட்சியின் வலி. கிழக்கு அமைப்பா ளர் இ.ஐங்கரன் ஆகியோர் கலந்து சிறப்பிக் கவுள்ளனர். (ஸ்ரீ-136)

# ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2011ஆம் கல்வியாண்டுக்கான அனுமதிப் பரீட்சை

(கொழும்பு)

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத் தின் 2011ஆம் கல்வியாண்டுக்கான அனு மதிப் பரீட்சை நாளை, நாளை மறுதினம் மற்றும் எதிர்வரும் 12ஆம் திகதிகளில் நாடு பூராகவும் நடைபெறவுள்ளன.

வடபகுதி மாணவர்களுக்கான பரீட்சை கள் முதன்முறையாக இம்முறை யாழ்ப்பா ணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங் களில் நடைபெறவுள்ளதாகவும் இதற்கான பரீட்சை நிலையங்கள் யாழ்/வேம்படி பெண் கள் உயர்தரப் பாடசாலை, வவுனியா சிவப்பிர காச பெண்கள் கல்லூரி, மன்னார் வித்தி விநாயகர் இந்துக் கல்லூரி ஆகிய பாட சாலைகளில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைக்கான வடபகுதி இணைப்பாளரும் விரிவுரையாளருமான மா.ரூபவதனன் தெரி வித்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மாண வர்கள் தாம் தெரிவு செய்த மாவட்டங்களில் பரீட்சை எழுத முடியும் என அவர் தெரிவித்துள் ளார்.

அத்துடன் பரீட்சைக்கான அனுமதி அட்டை கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இது வரை அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்கள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்துடன் 0112785230, 0112177075 என்ற தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளு மாறு அவர் கேட்டுள்ளார்.

நாளை சனிக்கிழமை பொது அறிவுப் பரீட்சையும், விஞ்ஞானமும் தொழினுட்பப் பரீட்சையும், கணனி விஞ்ஞானமும் தொழி னுட்பமும், கைத்தொழில் தகவல் தொழினுட் பம் ஆகிய கற்கைநெறிகளுக்கான பரீட்சை களும் நடைபெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொழில் முயற்சியும் முகாமைத்துவமும், விருந்தோம்பல், சுற்றுலா முகாமைத்துவம், தேயிலைத் தொழினுட்பமும் பெறுமதி சேர்ப் பும், ஏற்றுமதி விவசாயம் ஆகிய கற்கைநெறி களுக்கான பரீட்சைகளும் நடைபெறும்.

எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை விலங்கு விஞ்ஞானம், கனிப்பொருள் வளங் களும் தொழினுட்பமும், நீர்வாழ் வளங்களும் தொழினுட்பமும், பனைவினம், இறப்பர் தொழி னுட்பம் ஆகிய கற்கை நெறிகளுக்கான பரீட் சைகள் இடம்பெறும்.

பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெறும் திகதி, நேரம் என்பவற்றைக் கவனத்திலெ டுத்து உரிய நேரங்களில் பரீட்சைக்குச் சமுக மளிக்குமாறு கேட்கப்படுகிறார்கள். (ஸ்ரீ-2)

# ஆணைக்குழுவின் பணிகளை காத்திரமாக முன்னெடுக்க சாட்சி பாதுகாப்பு சட்டம் அவசியம்

## ஐ.தே.க. வலியுறுத்து

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் பணிகளை காத்திரமாக முன்னெ டுக்க சாட்சிப் பாதுகாப்புச் சட்டம் மிகவும் அவசியமானது என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டம் அமுல் படுத்தப்பட்டால் மட்டுமே உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவினால் சரியான சாட்சியங்களை திரட்ட முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

சாட்சிப் பாதுகாப்பு சட்டம் அமுல்படுத் தப்பட்டால் மக்கள் சுயமாகவே முன்வந்து உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு விடம் முக்கியமான சாட்சியங்களை வழங்கு வார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட தவ றுகளிலிருந்து படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலும் கடந்தகாலத் தவறு கள் மீளவும் இடம்பெறுவதனை தடுப்பதற்கா கவும் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு நிறுவப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

எனினும் சரியான முறையில் சாட்சியங் களை திரட்ட முடியாவிட்டால் ஆணைக்குழு வின் நடவடிக்கைகள் தோல்வியடையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யதார்த்தமான சமாதானத்தை எட்ட வேண்டுமாயின் சகல உண்மைகளும் வெளிப் படுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தி யுள்ளார். (ஸ்ரீ-2)







பூநகரி மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கேணல் ஜெயசூரிய மங்கல விளக்கேற்றுவதையும் மாணவர்களின் அணி வகுப்பு நிகழ்வையும் அதிபர் இ.பாலச்சந்திரன் விருந்தினர்களுடன் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: பூநகரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம்

55





**கவிப்பேரரசு வைரமுத்து**

இடுப்புல துண்டக் கட்னாரு பேயத்தேவரு பழம் தேங்கா வச்சாரு பத்தி கொளுத்துனாரு கைநெறைய விபூதிய அள்ளி, கட்டை விரல் போக மத்த விரல் நாலையும் நெத்தியில அழுத்திப் பட்டையடிச்சாரு.

"வைரவா! சீலக்காரி! மண்ணுல கெணறு தோண்டுறேன்; கண்ணுல தண்ணிவராமக் காப்பாத்துங்க. ஆத்தே! அழகம்மா! பத்தும் பத்தாததுக்கு நீயும் பாத்துக்கடி யம்மா!"

'கும்பிடப்பா நீயும்'ன்னு சொல்லிட்டு மடார்ன்னு மண்ணுல விழுந்தாரு. மொக்கராசும் விழுந்து மொழங்கால் தேஞ்சான். இடுப்புக்குக் கீழ தரையில படாமப் பாத்துக்கிட்டான். இன்னும் 'அது முழுசா ஆறல' நெஞ்சுலயும் வேட்டியிலயும் ஒட்டுன ஒட்டுப்புல்ல எடுத்தெறியாமலே எந்திரிச்சு, கிழக்க மேற்க நடந்து பாத்து கையாலயே மொழம் போட்டாரு பேயத்தேவரு.

கிழக்க மேற்க - நீளம்; அது ஒரு கெசம் எச்சா இருக்கணும். தெக்க வடக்க- அகலம்; அது ஒரு கெசம் கம்மியா இருக்கணும். இருக்கப்பட்ட மகராசனுங்க பத்துக் கெசத்துக்கு ஒம்போது கெசம்ன்னு கெணறு தோண்டலாம். நம்ம பொழப்பு இந்தப் பொ்ழப்பு. 'ஏழுக்கு ஆறு' போதும்

ஏழு கெச நீளம், ஆறுகெச அகலம் அளந்தாரு. மம்பெட்டிஎடுத்து அழுந்த வெட்டி அடையாளம் போட்டு நாலு மூலைக்கும் மொளக்குச்சி அடிச்சாரு.

என்னமோ நடக்குது பூமியிலன்னு எட்டிப்பாக்குது சூரியன்.

எடுத்தாரு பேயத்தேவரு வீச்சரிவாள ஒருகையில வெட்டருவாள ஒரு கையில ரெண்டு கையிலயும் ரெண்டு சிலம்பு சுத்துற ஒரு வெடலப்பயமாதிரி அங்கிட்டும் இங்கிட்டும் ஆவேசமா வீசுறாரு அருவாள. அந்த ஏழுக்கு ஆறுசெவ்வகத்துக்குப் பாத்தியப்பட்ட எலந்தஞ்செடி - நெருஞ்சிமுள்ளு - கத்தாழை - வேலாங்குட்டி எல்லாம் சிதறு தேங்கா போட்டது மாதிரி சிதறுதுக. அன்னைக்குத்தான் பூத்த ஆவாரம்பூவொண்ணு வெட்டுப்பட்ட வேகத்துல தெறிச்சு விழுகிது மொக்கராசு மூஞ்சியில. அதுக்குள்ள அடஞ்சு கெடந்த பூரான் தேளெல்லாம் போறேன் போறேன்னு ஓடி ஒளியுதுக.

ஆத்தாடி! இந்தக் கெழவனுக்குள்ள ஆவி கீவி புகுந்திருச்சான்னு நெஞ்சப்புடிச்சு நிக்கிறான் மொக்கராசு அருவா வீசுற வேகத்துல சும்மா சரளைக தீப்புடிக்குது. கத்தாழ மேல கிடந்த ஒரு பாம்புச் சட்ட பறக்குது.

இப்படி ஒரு வைராக்கியமான கெழவன எனக்குத் தெரிஞ்சு எந்தப் பகல்லயும் பாக்கலையேன்னு மேல எழும்பாம நின்ன எடத்துலயே நிக்கிது சூரியன்.

"எடுடா மம்புட்டிய. புடிடா கூடைய."

என்னமோ அல்வாவைக் கரண்டியில வெட்டிப் போடுற மாதிரி, மம்பட்டியில மண்ண வெட்டிக் கூடையில எறியிறாரு. அடுத்த வெட்டு வெட்டிமண்ண விட்டு மம்முட்டி எந்திரிக்கும்முன்ன கொட்டிட்டுக் கூடையை கொண்டாந்து வைக்கிறான் மொக்கராசு.

ஒரு எழுபதும் பதினாலுமாச் சேந்து கெணறு வெட்டுற அதிசயத்தக் கண்டு மெரளுது கள்ளிக்காடு.

இப்படி ஒரு வங்கொடுமையைப் பாத்ததில்லையேன்னு நெஞ்சிலடிச்சுக்கிட்டே பறந்துபோகுதுக இரைதேடப் போற காடைக.

சரளையக் கடந்தா ஒன்றரை அடிக்குள்ள சிவீர்ன்னு சிரிக்குது செம்மண்ணு. செவப்புன்னா செவப்பு செஞ்செவப்பு! கண்ணப் பறிக்கிற செவப்பு. மண்ணுக்கு எப்படித்தான் இந்தச் செவப்பு நெறம் வந்து சேந்துச்சோ? மனுசப்பயக காலங்கா்லமா மண்ணுக்குச் சண்டபோட்டுச் சிந்துன ரத்தத்துல மண்ணு செவப்பாகிப் போச்சோ?

இன்னும் கொஞ்சம் கீழ போனவுடனேயே மம்பட்டிக்கு மசியல மண்ணு. பொறாம புடிச்ச மனசு மாதிரி இறுகிக் கெடக்கு கெட்டியா. மம்பட்டியக் கீழ போட்டுட்டுக் கடப்பாரையை எடுத்தாரு பேயத்தேவர். செங்குத்தாத் தூக்கிப் புடிச்சு பூமிக்குள்ள எறக்கும்போது கொஞ்சம் சாய்ச்சு எறக்குனா சக்தியோட எறங்கும் கடப்பாரை. மண்ணுக்குள்ள போன கடப்பாரைய நேக்கா சாச்சு ஒரு எம்பு எம்புனா பொதபொதன்னு உதிரும் மண்ணு புட்டுமாதிரி.

குத்தித் தள்ளத்தாத்தன்; கூடையில அள்ளப்பேரன் நிக்கிறதில்ல உக்கார்றதில்ல நேரத்துக்கு கஞ்சிகுடிக்கிறதில்ல. சிலநேரத்துல கஞ்சி குடிச்சுக் கைகழுவுனத்துக்கு அப்புறமும் கூட பல்லுத்தேச்சமா இல்லையாங்கிறது ஞாபகத்துக்கு வருதில்ல. கள்ளிப்புதரும் கத்தாழங்காடும் கலவரப்பட்டு நிக்குது - பேயாட்டம் ஆடற பேயத்தேவர் கூத்தப்பாத்து.

எங்கக்கூடுகளக் காங்கலையேன்னு கிலுவமரத்து உச்சியில உக்காந்து 'குய் குய்'ன்னு அழுகுதுக குன்னாங் குருவிக.

என்னமோ செய்யிறாங்கடா இந்தப் பயகன்னு கள்ளிமரத்துக்குப் பின்னால நின்னு கழுத்துல இருக்கிற தொங்குதசைச் சவ்வு துடிக்க எட்டிஎட்டிப் பாக்குது ஓணான் ஒண்ணு.

ஒருவாரமாச்சு... பத்து நாளாச்சு... ஒருமாசமாச்சு... சரளையத் தாண்டி செம்மண்ணத்தோண்டி ரெண்டு கெசம் உள்ளபோனா, இதுக்கு மேல நீயா நானா பாப்பம்ன்னு மப்போட நிக்குது. மாங்கொட்டச்சட்டு கல்லைக்கூட உடைச்சிரலாம் இந்த மாங்கொட்டச்சட்டு இருக்கே... அதப் பேத்து எடுக்கிறதுதான் பெரும் பாடு.

ஒரே மாசத்துல ஆளுதேஞ்சு அ(ரை)ர ஆளப் போய்ட்டாரு பேயத்தேவர். புளிய வெதை மாதிரி கொஞ்சம் செங்கறுப்பா இருந்த தோலு கருகமணி மாதிரி கறுத்துப்போச்சுது. அவனும் பாவம் வேட்டைக்கம்பு மாதிரி இருந்த பய... சாட்டைக் கம்பு மாதிரி இளைச்சுப்போனான்.

"ஏலே மொக்க! இந்த மாங்கொட்டச்சட்டு ஆப்புவைக்காம அசையாதுடா சாமி. வா! தாத்தாவுக்கும் பேரனுக்கும் பந்தயம் ஆப்பு அடிக்கிறதுல ஆம்பளச்சிங்கம் நீயா நானான்னு பாப்போம்." - உசுரில்லாம வேலசெஞ்சுகிட்டு இருந்த பேரன உசுப்பேத்தி விட்டார் பேயத்தேவர்.

தாத்தாவும் பேரனும் சம்மட்டியை மாத்தி மாத்தி ஆப்படிக்க பள்ளத்துக்குள்ள இருந்து வந்த சத்தத்துல கள்ளிக்காட்டு நரிகளெல்லாம் இண்டம் புதருக்குள்ள ஓடி ஒளிஞ்சதுக.

ஒரு காஞ்ச மொளகாயக் கடிச்சுக் கம்பங்கூள குடிச்சுக்கிட்டு, முருகாயி அவிச்சுக்குடுக்கிற கானப் பயறையோ கல்லுப் பயறையோ திண்ணுக்கிட்டு தாத்தாவும் பேரனும் மட்டும் கிணறுவெட்டிக் கிறங்கிப்போய் வாரதக்கண்டு ஊரே பெருமூச்சு விட்டுப் பேச்சிச்சு ஆனா ஐஞ்சுபத்துக் கொடுக்கக்கூட ஆளில்ள ஊர்ல; பஞ்சம். வெறும் கேப்பைக் களியக்கிண்டி மகிழிக்கீரைய உப்புப்போட்டு கடஞ்சு திண்ணுகிட்டு இருக்காக ஊர்க்காரக. அந்த மகிழிக்கீரையில ஒரு பட்ட மிளகாயும் போட்டுக் கடல எண்ணெ வாடையும் காட்டிட்டா - அவுக இருக்கப்பட்டவுக. இந்த லச்சணத்துல யாரக் காசு கேக்கிறது? யாரக்கடன் கேக்கிறது? உசுர் இருக்கிற வரைக்கும் முட்டிப்பாப்பம்ண்ணு ஒரே நோக்கமா - கெணறே கதியின்னு கெடந்தாரு பேயத்தேவர்.

நெலாவெளிச்சத்துல கூந்தாலம் போட்டு குத்த ஆரம்மிச்சாரு. இந்த நிலாமட்டும் முப்பது நாளும் இருந்தா நல்லாருக்குமேன்னு முதமுதலா நெனச்சாரு. அப்பப்ப லேசா குறுக்கு வலி வரும் தலசுத்துற மாதிரியிருக்கும். மண்படிவழியா மேல ஏறிவருவாரு என்னமோ கட்டிமுடிச்ச கோபுரத்த மகாராசா அண்ணாந்து பாக்குற மாதிரி தோண்டிக் குவிச்சு வச்ச மண்ணப்பாத்து மலச்சு நிப்பாரு.

"பூமி உருவான நாளையிலேயிருந்து செயில் கைதியாகக்கிடந்தீக. பேயத்தேவன் வந்து விடுதல தரன்னும்ன்னு பேரேட்டில எழுதிருக்கு". மண்ணுக் குவிய பாத்துப்பேசி அவராச்சிரிச்சுக்குவாரு. இந்தா இந்தான்னு ஒண்றரை மாசம் போராடி மாங்கொட்டை சட்ட காளிபண்ணி காக்கப் பொண்ணு கண்ணுளபட்ட உடனேயே ஒரு சின்ன நம்பிக்க வந்திருச்சு பேயத்தேவருக்கு.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் சட்டங்களுக்கு மதிப்பளிக்காத அரச ஊழியர்கள் மீது நடவடிக்கை



## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அரசாங்க ஊழியர்கள் தேர்தல் சட்டங்களை மதிப்பதில்லை என முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக தேர்தலில் போட்டியிடும் அரசாங்க ஊழியர்கள் தமது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்ற பிரதான நிபந்தனையை சிலர் உதாசீனம் செய்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

போட்டியிடும் வேட்பாளர்கள் அரசாங்க பதவிகளை இராஜினாமா செய்வதுடன் குறித்த காலப் பகுதிக்கான சம்பளங்களையும் பெற்றுக் கொள்ளக் கூடாது என்பது நியதியாகும்.

இந்தச் சட்டங்களுக்கு மதிப்பளித்து செயற்படாத ஊழியர்கள் தொடர்பில் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க நிறுவனங்களின் பிரதானிகளுக்கு தேர்தல் ஆணையாளர் சுற்றுநிருபம் ஊடாக அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் கணிசமானளவு அரசாங்க ஊழியர்கள் போட்டியிடுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (ஸ்ரீ-2)

# கம்பன் விழாவில் பேராளர்களாக கலந்துகொள்ள விரும்புவோருக்கு

கொழும்பு கம்பன் கழகம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21,22,23,24 ஆம் திகதிகளில் கம்பன் விழாவினை நடாத்தவுள்ளது. இவ்விழாவில் பட்டிமன்றம், கவியரங்கம், கருத்தரங்கம், சுழலும் சொற்போர், சிந்தனை அரங்கம், வழக்காடு மன்றம், தனியுரை, ஆன்றோர் கௌரவிப்பு போன்ற பல சுவைமிகு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ்விழா நிகழ்ச்சிகளில் பார்வையாளராகக் கலந்துகொள்ள விரும்பும் பேராளர்கள் தமது பெயர், முகவரி, வயது, பால், தொலைபேசி இலக்கம் முதலியவற்றைக் குறித்து உடனடியாக கம்பன் கோட்டம், இலக்கம் 12, இராம கிருஷ்ண தோட்டம், கொழும்பு-06 எனும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு அறி விக்கப்பட்டுள்ளது.

கடித உறையின் இடது பக்கத்தில் கம்பன் விழா பேராளர் பதிவு எனக் குறிப்பிடவும். ஏற்றுக் கொள்ளப்படும் முதல் 50 பேராளர்களுக்கு விழாவில் இருக்கைப்பதிவும் தங்குமிட, உணவு வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளதுடன் அடுத்த 150 பேராளர்களுக்கு விழாவில் இருக்கைப் பதிவும் உணவு வசதிகளும் செய்து தரப்படும் என கம்பன் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிகழ்வுகளில் இலங்கை, இந்திய, மலேசிய அறிஞர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# சட்டவிரோதமாக குவைத்தில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களுக்கு பொது மன்னிப்பு

குவைத் நாட்டில் சட்டவிரோதமான முறையில் தங்கி இருக்கும் வெளிநாட்டவர்களுக்கு இம்மாதம் தொடக்கம் எதிர்வரும் ஜூன் மாதம் வரை பொதுமன்னிப்பு வழங்கப் படுகின்றது.

இவர்கள் இப் பொதுமன்னிப்பை பயன்படுத்தி குவைத்தை விட்டு வெளியேற முடியும் எனவும் தண்டனை எதுவும் வழங்கப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப் பொதுமன்னிப்பால் 4 ஆயிரம் இலங்கையர்கள் வரை நன்மை அடைவார்கள் எனக் குறிப்பிடப்படுகிறது.

விசா முடிந்தவர்கள், கடவுச்சீட்டை தொலைத்தவர்கள், சிறுகுற்றங்களுக்காக தேடப்படுபவர்கள், அவரவர் நாடுகளின் தூதரகங்கள் ஊடாக பொது மன்னிப்புக்கு விண்ணப்பிக்க முடியும்.

குவைத் வெளிவிவகார அமைச்சால் தூதரகங்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. இவற்றைப் பூரணப்படுத்தி வழங்க வேண்டும்.

இதேவேளை ஆயிரத்திற்கும் அதிகமான இலங்கையர்கள் தூதரகத்துக்கு நேற்று முன்தினம் சென்று பொதுமன்னிப்புக்கு விண்ணப்பித்து உள்ளதாகவும் இன்னும் 3 ஆயிரம் பேர் வரையானோர் விண்ணப்பிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# ஆந்திராவுக்கும் இலங்கைக்கும் இடையில் நேரடி விமான மற்றும் பயணிகள் கப்பல்சேவை

## இலங்கைத் தூதர் பிரசாத் காரியவசம் தெரிவிப்பு



இந்தியாவின் ஆந்திர பிரதேச மாநிலத்திற்கும், இலங்கைக்கும் இடையில் நேரடி விமான மற்றும் பயணிகள் கப்பல் சேவையை நடத்துவதற்கான ஒழுங்குகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கொழும்பிலிருந்து நேரடியாக விசாகப்பட்டினத்திற்கு விமான சேவையும் திருகோணமலை துறைமுகத்திலிருந்து ஆந்திராவிலுள்ள விசாகப்பட்டின துறைமுகத்திற்கு நேரடி பயணிகள் கப்பல் சேவையும் ஆரம்பிக்கப்படும் என இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் அறிவித்துள்ளார்.

ஆந்திர பிரதேசத்தின் கிட்டான் பல்கலைக்கழகம் ஒழுங்கு செய்த வணிகர்கள் சங்க கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் விமானம் மற்றும் கப்பல் சேவைகளை ஆரம்பிப்பதன் மூலம் இருநாடுகளுக்கு இடையில் இருந்து வரும் வர்த்தகத் தொடர்புகள் மேலும் அதிகரிக்கும். தெற்காசிய நாடுகளிடையே விமான கப்பல் போக்குவரத்தின் அவசியம் சமீபத்தில் நடைபெற்ற சார்க் உச்சி மாநாட்டில் வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இலங்கை கடந்த 30 ஆண்டுகளாக கடைப்பிடித்து வரும் கட்டுப்பாடற்ற பொருளாதார கொள்கையில் நல்லமுன்னேற்றம் அடைந்திருக்கிறது.

இன்று இலங்கையில் பூரண சமாதானம் திரும்பியிருக்கின்ற வேளையில் இலங்கை- இந்திய முதலீட்டாளர்கள் பரஸ்பரம் இரு நாடுகளிலும் முதலீடுகளை செய்து கட்டுப்பாடற்ற பொருளாதார கொள்கையின் மூலம் நன்மையடைவது அவசியம்.

இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையில் அதாவது கொழும்புத் துறைமுகத்திற்கும் தென் இந்தியாவின் தூத்துக்குடிக்கும் இடையிலான கப்பல் சேவை வெற்றிகரமாக திங்களன்று ஆரம்பமாகியது.

அதற்கு அடுத்தபடியாக தலை மன்னாருக்கும், இராமேஸ்வரத்திற்கும் இடையிலான கப்பல் சேவை மிக விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

ஆசிய நாடுகளில் இந்தியா இன்று பொருளாதார ரீதியில் முன்னணி நாடாக திகழ்ந்து கொண்டிருப்பதனால் இலங்கை- இந்தியாவில் இருந்து கூடுதலான முதலீடுகளை எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறது.

1978 ஆம் ஆண்டிலிருந்து 1995 ஆம் ஆண்டு வரையில் இலங்கைக்கு வந்த மொத்த வெளிநாட்டு முதலீட்டில் 1.2 சதவீதத்தையே இந்தியா முதலீடாக கொடுத்திருந்தது.

1998 ஆம் ஆண்டில் இந்தியா, இலங்கையில் 1.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்தது. 2008 ஆம் ஆண்டில் இந்தியா 125.9 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கையில் முதலீடு செய்தது. இது இலங்கைக்கு கிடைத்த மொத்த வெளிநாட்டு முதலீட்டில் இது 14 சதவீத மாகும்.

இந்தியா 2007 இல் செய்த முதலீடுகள் மூலம் இந்திய நிறுவனங்கள் 70 க்கும் மேற்பட்ட திட்டங்களை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றன. இன்று இந்தியா, இலங்கையில் ஆகக் கூடுதலான வெளிநாட்டு முதலீட்டை செய்யும் நாடாக மாறிக்கொண்டிருக்கிறது என்றும் அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# முன்னாள் போராளிகள் சுயதொழிலை மேற்கொள்ள வங்கிக்கடன் திட்டம்

(கொழும்பு)

புனர்வாழ்வு நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் சுயதொழில் மேற்கொள்வதற்காக வங்கிக் கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுனந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை வவுனியா நகர சபை மண்டபத்தில் 106 போராளிகளை விடுவிக்கும் வைபவத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

பாலர்பாடசாலை ஆசிரியர் பயிற்சியினை 23 பேர் பெற்றுள்ளனர். இதனூடாக சமூகத்திற்கு செய்யும் கல்வித் தொழில் சிறந்தமுறையில் இருக்க வேண்டும். பிரதேச செயலாளர்கள் மூலம் சில உதவித் திட்டங்களும் உங்களுக்கு கிடைக்கவுள்ளன.

உங்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கு உதவி செய்யும் நோக்குடன் மாதம் ஒரு முறை படை அதிகாரிகள் உங்களைச் சந்திப்பார்கள். அவர்களிடம் உங்கள் விபரங்களை தெரிவிக்க தவற வேண்டாம்.


பல்கலைக்கழக பட்டப்படிப்பிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள முன்னாள் போராளி மாணவிக்கு புலமைப்பரிசில் திட்டமொன்றினை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளோம். நீங்கள் தேவையான பயிற்சிகளை பெற்றுள்ளீர்கள். எனவே தொழில் வாய்ப்புகளுக்கு இடமுண்டு என்றார். (ஸ்ரீ-2)



அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் வருடாந்த பொதுக்கூட்டம் கட்சித் தலைமைச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இக்கட்சியின் முன்னாள் தலைவர் வின்சன் டீ போல் கட்சிக் கொடியேற்றி வைப்பதையும் கட்சியின் பொதுச்செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்துரை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாயிரக்கணக்கான தமிழர்களை ஈழத்தில் கொன்று குவித்ததில் விஜய்நம்பியாருக்குப் பங்கு


விஜய் நம்பியார்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் நடேசன், புலித்தேவன், ரமேஷ் ஆகியோரையும் அவர்களுடன் வந்த வீரர்களையும் கொன்றது ஸ்ரீலங்கா இராணுவம்.

தமிழீழத் தலைவர்களை சரணடைவதற்காக வெளியே வரும்படி அழைத்தவர், ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனின் அலுவலக தலைமை அதிகாரியான கேரளாவைச் சேர்ந்த விஜய்நம்பியார். அதனால், அவர் பல்லாயிரக் கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்த குற்றத்தில் பங்கு பெற்று இருக்கிறார் என்று நெதர்லாந்தில் உள்ள சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப் பட்டுள்ளது. 'இனப்படு கொலைக்கு எதிரான அமெரிக்காவில் உள்ள தமிழர்கள்' என்ற அமைப்பும் 'ஸ்விட்சர்லாந்து ஈழத் தமிழர் கவுன்சில்' என்ற அமைப்பும் கூட்டாகச் சோந்து இந்த வழக்கைப் பதிவு செய்துள்ளன.


பாலித கோஹண


பான் கீ மூன்

இலங்கையில் நடந்த இனப்படு கொலையை மூடி மறைப்பதில், ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிந்தோ தெரியாமலோ, பெரும் பங்கு வகித்திருப்பதாக சர்வதேசத் தமிழர்கள் மத்தியில் நிலவிவரும் சந்தேகத்துக்கு வலுச் சேர்ப்பதாக இந்த வழக்கு அமைந் துள்ளது.

சர்வதேச நீதிமன்றத்தில் இந்த வழக்குக்காக முக்கியமான குறிப் புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் தலைவர்கள் நடேசன், புலித்தேவசன், ரமேஷ் உள்ளிட்டோர் ஐ.நா. பொதுச் செயலாளரின் அலுவலகத் தலைமை அதிகாரி விஜய்நம்பியாருடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேசிய போது,

அவர்களுடைய பாதுகாப்புக்கு உறுதி அளித்திருக்கிறார் விஜய் நம்பியார்.

அவரின் உறுதி மொழியை நம்பி வந்த நடேசன், புலித்தேவன், ரமேஷ் உட்பட்ட புலிகள் இயக்கத்தின் தலைவர்கள் அனைவரும் கூண்டோடு சுட்டுக்கொல்லப்பட்டு இருக்கிறார்கள் என்றும் உறுதியாக நம்பப்படுவதாக இன்னர் சிற்றி பிரஸ் என்ற நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து அல்ஜசீரா என்ற அரபுத் தொலைக்காட்சிக்கு விஜய் நம்பியார் அளித்த பேட்டியில், "மகிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் அவுஸ்திரேலியக் குடியுரிமை பெற்ற ஸ்ரீலங்கா மருத்துவர் பாலித கோஹண ஆகியோர், சரணடைய வரும் புலிகள் அனைவரும் போர்க் கைதிகளுக்கு உரிய மரியாதையோடு நடத்தப்படுவார்கள் என்று உறுதியளித்தனர்!" என்று கூறியிருக்கிறார். மேலும் அதே பேட்டியில், இலங்கை அரசைத் தொடர்பு கொண்டு புலிகளின் உயிருக்கு அரசு அளித்த உத்தரவாதத்தை உறுதி செய்து கொண்டதாகவும் தெரிவித் துள்ளார்.

இத்தனை உறுதிமொழிகளுக்குப் பின்னரும் எப்படி இப்படி ஒரு படுகொலை நடந்தது என்ற வினாவுக்கு, "தலைவர்கள் இலங்கை இராணுவத்திடம் சரணடைவதை விரும்பாத விடுதலைப்புலிகள் இராணுவத்துடன் போரிட்டிருக்கலாம். அப்போது நடந்த சண்டையில் சரணடைய வந்த புலித்தலைவர்களும் கொல்லப்பட்டு இருக்கலாம்..." என்று நம்பியார் கூறியுள்ளார்.

"இது உங்கள் அனுமானம்தானே... நடந்த உண்மை என்ன?" என்ற கேள்விக்கு விஜய் நம்பியார் தெளிவான பதில் கொடுக்காமல் மழுப்பிவிட்டார்.

இந்த வழக்கில் விஜய் நம்பியாருடன் சேர்த்து ஆஸ்திரேலியக் குடியுரிமை பெற்ற ஸ்ரீலங்கா மருத்துவரான பலித கோஹனேவும் குற்றம் சாட்டப்பட் டுள்ளார். இவர் ஆஸ்திரேலிய வெளியுறவுத் துறையில் அதிகாரியாகப் பணியாற்றியவர். இவர் மீது போர்க் குற்றம் சுமத்தப்பட்டு இருப்பதால், அவுஸ்திரேலிய அரசாங்கமும், உயர் அதி காரிகளும் பலத்த அதிர்ச்சிக்கு ஆளாகியுள்ளனர்.

ராஜபக்ஷவுடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ள ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் மீது, உலகத் தமிழர்கள் வைத்திருந்த நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வருகிறது. அதனால் 'நான் நேர்மையானவன்' என்று உலகத்துக்கு நிரூபிக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகியிருக்கிறார் ஐ.நா. பொதுச் செயலாளர்!

கேரள நம்பியார், தமிழர்களுக்கு மட்டும் வில்லனாக விளங்கவில்லை. உரிமை கேட்டுப் போராடுகிற அனைத்து மக்களுக்கும் எதிரியாகவே செயல்படுகிறார்.

## தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான பொதுமக்களைக் கொன்று குவித்த குற்றத்தில் ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கீ மூனின் அலுவலகத் தலைமை அதிகாரி விஜய்நம்பியாருக்குப் பங்கு இருக்கிறது; நெதர்லாந்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் புலம்பெயர் மக்கள் அமைப்புக்கள் வழக்குத் தாக்கல்.

விஜய் நம்பியாரை டிசம்பர் 2010 இல் பர்மாவுக்கான சிறப்புத் தூதராக பான் கீ மூன் நியமித்தார். இதை எதிர்த்து இங்கிலாந்தில் உள்ள பர்மா மக்கள் குழுவினர், "நம்பியார், பர்மா அரசாங்கத்துடன் இணைந்து ராஜபக்ஷவுடன் நடத்திய இனப்படு கொலையை அரங்கேற்றிவிடுவார் என நாங்கள் அஞ்சுகிறோம். ஆகவே அவரை மாற்ற வேண்டும்..." என்று கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்த குழுவினர் சார்பாக மாாக், பார்மனர் விடுத்த வேண்டுகோளை ஏற்று, ஐ.நாவுக்கான இங்கிலாந்து தூதர் மார்க்லையல்கிராண்ட் "பர்மாவுக்கான ஐ.நா. சிறப்புத் தூதர் பதவியில் இருந்து நம்பியாரை மாற்றி விட்டு, வேறு ஒருவரை நியமிக்க வேண்டும்!" என்று ஆதரவுக் குரல் எழுப்பி இருக்கிறார்.


தகவல்: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களை நம்புங்கள்! கடவுளை நம்பாதீர்கள்!

வாழ்க்கையின் ஒவ்வொரு கோணத்தையும், படைப்பின் ஒவ்வொரு இரகசியத்தையும் நுணுக்கமாகக் கவனித்து உருவான கலாசாரம், இங்கு போல் வேறெங்குமில்லை.

வாழ்க்கையின் பூரணத்துவத்தை வேர் வரை உய்த்து உணரக்கூடிய கலாசராத்தில் பிறந்தும், உலகில் நாம் கோமாளிகளாகத் தோற்றமளிக்கக் காரணம் என்ன?



அடிப்படையான பிழைப்புக் கூட நம்மை நம்புவதைக் குறைத்துக் கொண்டு கடவுளை நம்பி இருப்பதுதான்.

இந்த உலகில் நமக்குத் தேவையானதைத் தேடிப்பெற, மண்புழுவிலிருந்து மாபெரும் யானை வரை யாவும் தங்கள் திறமையைத்தான் நம்பியிருக்கின்றன. யாரிடமும் போய் உதவி கேட்பதில்லை. அவற்றை யெல்லாம் விட மிக அதிகமான புத்திசாலித்தனம் கொண்ட மனிதன் மட்டும்தான் தனக்குத் தேவையானதைக் கடவுளிடம் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கின்றான். நீங்கள் பிழைத்திருக்க உங்களுக்குக் கொடுக்கப்பட்ட கைகளும் கால்களுமே போதும்!

உங்கள் உடலையும், மனதையும் எப்படித் திறம்படப் பயன்படுத்துவது என்பதற்கான பயிற்சிகள் கொடுத்தால் போதும்! அதை விட்டுவிட்டு, கடவுளை உங்கள் பிழைப்புக்கு உதவுவதற்காக அழைப்பது கேவலம்.

ஆம், தினப்படி வாழ்க்கைக்குக் கடவுள் தேவையில்லை! பல இலட்சம் கோயில்கள் இருந்தும், எங்கு திரும்பினாலும் ஏன் வேதனை மிகுந்த முகங்களைப் பார்க்கிறோம்? உண்மையையும், உபதேசத்தையும் போட்டுக் குழப்பிக் கொண்டதால் வந்த பிரச்சினை இது. கடவுள் உங்களை விட மிகச் சக்தி வாய்ந்தவர்; அவர் இல்லாமல் ஓர் அணுவும் அசையாது என்பீர்கள். ஆனால், அவரை நம்பி உண்மையிலேயே உங்களை ஒப்படைப்பீர்களா? மாட்டீர்கள்?

அவரின் புத்திசாலித்தனத்தின் மீது சந்தேகம் கொண்டு தினம் தினம் அவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று அவர் முன் நின்று கண்களை மூடியபடி, நீங்கள் அல்லவா அவருக்குச் சொல்லிக் கொடுக்கிறீர்கள்?

உழைக்காமல் சாப்பிடவும் படிக்காமல் தேர்வுகளில் பாஸ் செய்யவும் உங்கள் தவறுகள் கவனிக்கப்படாமல் போகவும் கடவுளைத் துணையிருக்கச் சொல்கிறீர்கள். வாழ்க்கை திடுமெனப் புரண்டு விட்டால் என்ன செய்வது என்று கடவுளை ஒரு இன்சூரன்ஸ் ஆக வைத்திருக்கிறீர்கள். கோயில் கோயிலாக அதற்கான பிரீமியம் கட்டுகிறீர்கள்.

'இதையெல்லாம் கொண்டு வா!' 'இதிலிருந் தெல்லாம் காப்பாற்று!' என்று உங்கள் சேவகனாகவும் பாதுகாப்புச் சிப்பாயாகவும் கடவுளை நியமிக்கப் பார்க்கிறீர்கள். வாழ்க்கையைப் பற்றிய அச்சம் மட்டுமே கடவுளைப் பற்றிய நம்பிக்கைகளை வளர்த்திருந்தால் உங்களிடம் தெய்வமும் தங்காது... வாழ்க்கையும் மிஞ்சாது.

சங்கரன்பிள்ளையிடம் ஒரு வேலைக்காரன் இருந்தான். ஒருமுறை உப்பும், சர்க்கரையும் வாங்கிவர அவனை சங்கரன் பிள்ளை கடைத்தெருவுக்கு அனுப்பினார். வேலைக்காரன் முதலில் பை நிறைய சர்க்கரை வாங்கி னான். அடுத்ததாக உப்பு வாங்கப் போன போது, இரண்டையும் கலந்து 'வாங்கி வந்து விடாதே' என்று சங்கரன் பிள்ளை எச்சரிக்கை செய்திருந்தது நினைவுக்கு வந்தது.

பையை உள்ளும் வெளியுமாகப் புரட்டி விட்டால் வேறொரு பையாகி விடுமே என்று புரட்டினான். சர்க்கரையெல்லாம் தெருவில் கொட்டி வீணானது. பையில் உப்பை நிரப்பிக்கொண்டு வீடு திரும்பினான். 'உப்பு இருக்கிறது சர்க்கரை எங்கே?' என்று சங்கரன் பிள்ளை கேட்டார். அந்தப் புத்திசாலி வேலைக்காரன், பையின் அந்தப்பக்கம் இருக்கிறது என்று பையை மறுபடி உள்ளும் வெளியுமாகப் புரட்டினான். உப்பும் பூமியில் கொட்டி மண்ணில் கலந்தது.

அச்சமும் கடவுள் நம்பிக்கையும் இப்படித்தான். இரண்டையும் குழப்பிக் கொண்டால் எதற்கும் உதவாது. இதற்கு 'பக்தி' என்று பெயர் சூட்டி ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். உண்மையில் கடவுளை உங்களுக்கு மேலானவராக நினைத்தால் உங்கள் வாழ்க்கை எதிர்பார்த்தபடி நடக்காத போது 'ஆஹா, கடவுள் விருப்பப்படி நடக்கிறதே!' என்று சந்தோசம் அல்லவா கொள்ள வேண்டும்! முடிகிறதா?

மாறாக வாழ்க்கையை எப்படி நடத்தித் தரவேண்டும் என்று, பிரார்த்தனை என்ற பெயரில் கடவுளுக்கு உத்தரவுகள் தானே கொடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள்? சந்தோசம் இருக்கும் மனதில் பக்தி நிகழ்வதில்லை. கடவுளிடம் பணிவது போன்ற பாசாங்கு தான் நிகழ்கிறது.

பக்தி என்பது உங்கள் அடையாளங்களை இழந்து எதன்மீது பக்தி கொண்டீர்களோ அதனுடன் இரண்டறக் கரைவது. உங்கள் தவறுகளுக்கான பழியை ஏற்றுக் கொள்ள சக மனிதர்கள் தயாராக இல்லாதபோது, தெய்வச் செயல் என்று அவற்றைச் சுமத்த வசதியான தோள்களாகக் கடவுளை வைத்திருக் கிறீர்கள்.



## ஆன்மீகம் 34

அதன் பெயர் பக்தி இல்லை. போலித்தனம்!

உங்கள் வாழ்க்கையை, கடவுளின் உதவியைக் கோராமல் நீங்களாக வாழக் கற்றுக்கொண்டீர்கள் என்றால் உங்கள் வாழ்க்கை மேன்மையாகிவிடும். உங்களுக்குத் தேவையான உணவு கிடைத்து விட்டது. விரும்பிய துணை, குழந்தைகள், அனைத்தும் கிடைத்துவிட்டன. இருந்தாலும் இன்னும் எதற்காகவோ உள்ளம் ஏங்குகிறதே அதன் பெயர் என்ன?

இந்தப் படைப்பின் வேர் என்ன என்று அறிந்துகொள்ளும் ஆர்வம் அப்பாதுதான் தலையெடுத்திருக்கிறது என்று அர்த்தம். அதுதான் உண்மையான ஆன்மீகம். அப்போதுதான் கடவு ளைப் பார்க்க நீங்கள் தயார். அதுவரை அவரைத் துரத்தாதீர்கள்... விட்டு விடுங்ளகள்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# ஆற்றுகையும் ஆற்றுகைக் கலைகளும்

02



"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

**பேராசிரியர்.சி.மௌனகுரு**

1. ஆற்றுகைக் கற்கைநெறி:-

ஆற்றுகைக் கற்கைநெறி இன்று பிரபலமான கற்கைநெறியாகச் சிறப்பாக மேற்குலக நாடுகளில் கற்பிக்கப்படுகிறது. மனித முரண்பாடுகளுக்கான மானுட, சமூகச் சிக்கல்களுக் கான காரணத்தை ஆராயப் புறப்பட்ட ஆய்வாளர்கள் ஆற்றுகைகளுக்கூடாக அதனைக் காண முயன்றதும், வெற்றிகள் ஈட்டியதும் இக்கற்கைநெறி சிறப்பாக வளரக் காலாயின எனலாம்.

இக்கற்கை சம்பந்தமான தனிப்பட்ட கோட்பாடுகளைக் கூறாவிடினும் தத்தம் கட்டுரைகளிலும் நூல்களிலும் ஆற்றுகை பற்றிக் கூறிய நவீன யுகச் சிந்தனையாளர்களான சிக்மன் பிரய்ட், கார்ல் மாக்ஸ், பிரட்டறிக் நியட்ஸே தொடக்கம் லூயிஸ் அல்தூசர், வால்டர் பென்சமின், ரேமன் வில்லியம்ஸ், தெரிதா, பூக்கோ, எட்வேட்செயித் ஊடாக டிலியூஸ், கட்டாரி, யூடித் பட்லர் வரையுள்ளோரின் ஆற்றுகை பற்றிய கருத்துக்களை தனது (Theory of Performace Studies) எனும் நூலில் அறிமுகம் செய்கிறார் பிலிப் ஒஸ்லேண்டர் (Philip Auslander).

இவர்கட்கு முன்னரேயே மேற்குலகிலும், கிழக்குலகிலும் ஆற்றுகை பற்றிக் கூறிய பல அறிஞர்களையும் காணுகிறோம். அரிஸ்டோட்டில் தொடக்கம் பரத முனிவர் வரை என நாம் இவர்களை வரையறுக்கலாம்.

ஆற்றுகை, அறிஞர்களதும் சிந்தனையாளர்களதும் கவனத்தை ஈர்த்துள்ளது என்பதே இதன் சாராம்சமாகும். தனித்துவமான ஒரு துறையாகவும் கோட்பாடாகவும் இவ்வாற்றுகைக் கற்கை மேற்கிளம்பியது 1970ஆம் ஆண்டுகளுக்குப் பின்னரே ஆகும். இதன் ஸ்தாபகர்களுள் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவர்களுள் ஒருவர் ரிச்சட் செக்னராவார். 1970களில் இவர் "Essays on Performance Studies" எனும் நூலை வெளியிடுகிறார். இதன் பின்னர் ஆற்றுகைக் கற்கைநெறியானது கோட்பாடுகளினூடாகவும் ஏனைய அறிவியற்றுறைகளை இணைத்ததன் மூலமாகவும் மீள் உருவாக்கம் பெற்று மானுடவியல், சமூகவியல், அரங்கியல், பின்னமைப்பியல், பெண்ணியக் கற்கைகள், கலாசாரக் கற்கைகள் போன்ற பல்வேறு கற்கைநெறிகளூடாகச் செழுமை பெற்று இன்று ஆற்றுகைக் கற்கை என்பது மானுட குலத்தின் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் முரண்பாட்டையும் உளவியலையும் அறியும் பாடநெறியாக மாறியுள்ளது.

இக்கற்கைநெறி எல்லாப் பக்கங்களிலிருந்து வரும் ஆய்வாளர்களுக்குத் திறந்து விடப்பட்டிருக்கிறது. சமூகத்தை அறியப் புறப்படும், சமூக விஞ்ஞானிகளும் சமூகத்தை மாற்றச் செயற்படும் செயற்பாட்டாளர்களும் இக்கற்கை நெறியால் கவரப்படுகின்றனர்.

பல்வேறு துறைகளையும் உள்ளடக்கி வரும் இக்கற்கைநெறி தனக்குள் சமூகவியல், மானுடவியல், பேச்சுத் தொடர்பாடல், இலக்கியம், இசை, தத்துவம், நடனக் கற்கைகள், பண்பாட்டுக் கற்கைகள், புவியியல், உளவியல், அரசியல் ஆகிய சகல நெறிகளையும் உட்கொண்டு பரந்துபட்ட ஒரு பார்வையைத் தரும் கற்கைநெறியாக உருவாகியுள்ளது.

இக்கற்கைநெறியானது மனித குலத்தில் காணப்படும் தனிமனித முரண்பாடுகளையும் சமூக முரண்பாடுகளையும் தீர்க்கும் வழிவகைகளைக் கண்டறியும் ஒரு கற்கைநெறியாகவும் மேற்கிளம்பியுள்ளது.

2. ஆற்றுகைக் கலைகள்:-

பிறப்புத் தொடக்கம் இறப்புவரை மனிதகுலம் சமூக உறவுகளைக் கொள்வதற்காக நடாத்தப்படும் ஆற்றுகைகளிலிருந்து ஆற்றுகைக் கலைகள் வேறுபடுகின்றன.

கலைக்குரிய சில அளவுகோல்கள் உள. ஒழுங்கு, அழகு, நேர்த்தி, படைப்பாக்கம், உணர்வுகளைத் தூண்டல், பரவசமாக்கல், மனதைச் சாந்தப்படுத்தல், பொழுதுபோக்கு, மகிழ்ச்சி என்பனவெல்லாம் கலைகளை ஆற்றுகையிலிருந்து பிரித்துக் காட்டும் அம்சங்களாகும்.

ஆற்றுகையிலும் ஆற்றுகைக்கலைகளிலும் பார்ப்போரிடம் உறவு கொள்வதே சாராம்சமாக இருப்பினும் நிகழ்த்தும் முறைகளிலும் ஆற்றுவோருக்கும் ஆற்றப்படுவோருக்கும் இடையேயுள்ள உறவுகளிலும் வித்தியாசங்களும் உள்ளன.

முன்பு குறிப்பிட்ட அம்சங்களுடன், ஆற்றுகைக் கலைகளில் காணப்படுகின்ற சடங்குத் தன்மையினின்று விடுபடல் என்பது ஆற்றுகைக் கலை, ஆற்றுகையினின்று விடுபடும் முக்கிய புள்ளியாகும். உதாராணமாக ஒரு மரணவீட்டுச் சடங்கைச் செய்யும் போது அவ்வாற்றுகையில் நம்பிக்கையுடன் ஈடுபடும் மக்கள் அதே சடங்கு, மேடையில் ஒரு கலை போல செய்யும்போது நம்பிக்கையுடன் அதில் ஈடுபடாமல் ஒரு பொழுது போக்காக எண்ணி அவ்வாற்று கையைப் பார்க்கின்றனர். இங்கு பொழுதுபோக்கும் ரசிப்பும், சடங்கினின்று விடுபடும் நிலையும் வந்தவுடன் அது சடங்கு நிலை கடந்து கலையாக மாறும் தன்மை பெற்று விடுகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியாவின் துறைமுக நகரமும் போராட்டக்காரர்கள் வசமானது



லிபியாவில் அரசுக்கு எதிராக போராடி வரும் மக்களை ஒடுக்க ஜனாதிபதி கடாபி இராணுவத்தை ஏவிவிட்டுள்ளார். ஆனால் பொதுமக்கள் அதற்கு பயப்படாமல் தொடர்ந்து தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். லிபியாவின் முக்கிய நகரங்கள் ஒவ்வொன்றாக போராட்டக்காரர்கள் கைப்பற்றி வருகின்றனர்.

ஏற்கனவே பெங்காசி, மிஷ்ரதா, ஷாவியா ஆகிய 3 நகரங்களை போராட்டக்காரர்கள் கைப்பற்றி இருந்தனர். நேற்று முன்தினம் துறைமுக நகரமான பிரேகா நகரை அவர்கள் கைப்பற்றினார்கள்.

இத்துடன் 4 ஆவது நகரம் போராட்டக்காரர்களிடம் வீழ்ந்துள்ளது. இந்த நகரம் ஏற்கனவே இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்தது. பொதுமக்கள் அதிக அளவில் திரண்டு வந்ததால் இராணுவம் பின் வாங்கி நகரை விட்டு வெளியேறியது.

தற்போது இராணுவத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையே கடும் துப்பாக்கி சண்டை இடம்பெற்று வருகிறது. அடுத்ததாக தலை நகரம் திரிபோலியை கைப்பற்ற பொது மக்கள் தயாராகி வருகின்றனர். 4 திசைகளிலும் இருந்து திரண்டு வந்து நகரை முற்றுகையிட அவர்கள் தயாராகி வருகின்றனர்.

தலை நகருக்குள் வெளியில் இருந்து போராட்டக்காரர்கள் வந்து விடாமல் தடுக்க திரிபோலி நகரை சுற்றி இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது.

லிபியாவில் இடம்பெற்று வரும் கலவரத்தில் இதுவரை 6 ஆயிரம் பேர் பலியாகி இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. போராட்டம் வலுத்து வருவதால் கடாபி திரிபோலி நகரை விட்டு வெளியேறி நாட்டின் மேற்கு பகுதியில் உள்ள நகரத்துக்கு செல்ல திட்டமிட்டு இருப்பதாக கூறப்படுகிறது.

அங்கு அவரது ஆதரவாளர்கள் அதிகமாகவுள்ளனர். எனவே அவர் அங்கு செல்ல வாய்ப்பு இருப்பதாக கருதப்படுகிறது. (ஸ்ரீ-2)

# சோமாலிய கடற்கொள்ளையரிடம் சிக்கியுள்ள இந்திய மாலுமிகள்

சோமாலிய கடல் கொள்ளையரிடமிருந்து இந்தியரை மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என வெளியுறவுத்துறை செயலர் நிருபமாராவ் தெரிவித்தார்.

201 நாட்களாகப் பிணைக் கைதிகளாக உள்ளவர்களை விடுவிக்க 40 இலட்சம் டொலர்கள் தர வேண்டும் என கொள்ளையர் கோரிக்கை வைத்துள்ளனர்.

சோமாலிய கடல் கொள்ளையர்கள் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி எகிப்து நாட்டைச் சேர்ந்த எம்.வி. ஸயஸ் எனும் சரக்குக் கப்பலைக் கடத்தினர். இந்தக் கப்பலில் 6 இந்தியர்கள் இருந்தனர். இவர்களைத் தவிர இலங்கையைச் சேர்ந்த 4 பேர் , 4 பாகிஸ்தானியர், 11 எகிப்தியர் உள்ளனர்.

கடற்கொள்ளையர் இந்தியர்களை விடுவிக்க 40 இலட்சம் டொலர்கள் தர வேண்டும் என்றனர். இதுபோல் பிறரை விடுவிக்கவும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை கப்பல் உரிமையாளர் இது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மத்திய அரசு இந்தி விடயத்தில் மெத்தனமாக நடந்து வருகிறது என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனிடையே கடந்த முதலாம் திகதி வெளியுறவுத்துறை செயலர் தனது டுவிட்டர் செய்தியில் அரசு இது குறித்து தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது எனத் தெரிவித்தார்.

கடற்கொள்ளையர் குறித்த அனைத்துப் பிரச்சினைகளிலும் மத்திய கப்பல்துறை தான் ஒருங்கிணைக்கும் அதிகாரம் கொண்டிருக்கிறது. கப்பல்துறை இயங்குநர் ஜெனரல் இந்தப் பிரச்சினை குறித்து அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து வருகிறார்.

கப்பலின் சொந்தக்காரர்களான எகிப்து நிறுவனம் மாலுமிகளை மீட்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருந்தது. ஆனால் இதுவரை அவர்கள் எதுவும் செய்யவில்லை. கப்பல் துறை இயக்குநர் ஜெனரல் தனது முயற்சியைத் தொடர்ந்து செய்து வருகிறார் என நிருபமாராவ் தெரிவித்தார். (ஸ்ரீ-2)




# பாகிஸ்தானை உலுக்கிய அமைச்சரின் படுகொலை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் சிறுபான்மையினர் விவகாரத் துறை அமைச்சர் ஷாபாஸ் பட்டி நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டார். இரண்டு மாதங்களில் இடம் பெற்றுள்ள இரண்டாவது பெரிய அரசியல் படுகொலை இதுவாகும்.

பாகிஸ்தான் அரசில் சிறுபான்மையினர் விவகாரத்துறை அமைச்சராக இருந்தவர் ஷாபாஸ் பட்டி. பிரதமர் கிலானி தலைமையிலான அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த ஒரே கிறிஸ்தவரான இவர் சமீப காலமாக தனக்கு கொலை மிரட்டல் வருவதாக கூறி வந்தார்.

பாகிஸ்தான் அரசின் மத துவேச சட்டத்திற்கு எதிராகவும் அடிக்கடி குரல் கொடுத்தார். இறை தூதர் முகமது நபியை இழிவுபடுத்தியதற்காக கடந்த ஆண்டில் பாகிஸ்தானில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கிறிஸ்தவ பெண்ணான ஆசியா பீவிக்கு ஆதரவாகவும் தெரிவித்து வந்தார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் காலை 11.20 மணிக்கு இஸ்லாமாபாத்தில் செக்டார்-1 பி-யில் உள்ள தன் வீட்டிலிருந்து ஷாபாஸ் பட்டி காரில் புறப்பட்டார். அவருடன் சாரதியும் மற்றொரு அடையாளம் தெரியாத பெண்ணும் காரில் அமர்ந்திருந்தனர். பாதுகாவலர்கள் யாரும் இல்லை.

ஷாபாஸ் பட்டியின் கார் வீட்டை விட்டு வெளியே வந்த போது துப்பாக்கியுடன் வந்த ஒருவன் காரை நிறுத்தினான். சாரதியையும் காரில் அமர்ந்திருந்த பெண்ணையும் கீழே இறங்கும்படி கூறிய அவன் அவர்கள் இறங்கியதும் அமைச்சரை நோக்கி சரமாரியாகச் சுட்டான். 20 வினாடிகள் வரை சுட்டு விட்டு தப்பினான்.



பலத்த காயம் அடைந்த அமைச்சர் ஷாபாஸ் பட்டியை உடனடியாக அருகிலிருந்த ஷிபா சர்வதேச மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.அங்கு அவர் இறந்தார். அமைச்சரின் காரை துப்பாக்கியுடன் வந்த நான்கு பேர் பல கோணங்களில் இருந்து தாக்கிய தாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறி யுள்ளார்.

கடந்த ஜனவரி 4 ஆம் திகதி பாகிஸ்தான் பஞ்சாப் மாகாண ஆளுநர் சல்மான் தசீன் அவரது தீவிரவாத பாதுகாவலரால் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். அதன் பின் இரண்டு மாதத்திற்குள் இரண்டாவது பெரிய அரசியல் படுகொலை நடந்துள்ளது.

கொல்லப்பட்ட அமைச்சர் ஷாபாஸ் பட்டி தனது உயிருக்கு ஆபத்து உள்ள விவரம் குறித்து பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக், ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மற்றும் பிரதமர் கிலானி ஆகியோரிடம் ஏற்கனவே புகார் தெரிவித்துள்ளார்.

இருந்தும் அவருக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை. அமைச்சர் ஷாபாஸ் பட்டி படுகொலைக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி, பிரதமர் கிலானி உட்பட பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)



லிபியா ஜனாதிபதி கடாபிக்கு எதிராக தலைநகர் டிரிபோலியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டதில் அந்நாட்டின் குழந்தைகள் கலந்து கொண்டனர்.

# பூகம்பத்தை தொடர்ந்து புழுதிப் புயல் ஆபத்து

(கிறிஸ்ட்சர்ச்)

நியூசிலாந்தில் பூகம்பம் பாதித்த கிறிஸ்ட் சர்ச் பகுதியில் மீண்டும் புழுதி புயல் தாக்கியுள்ளது. நியூசிலாந்தின் இரண்டாவது மிகப் பெரிய நகரான கிறிஸ்ட் சர்ச் கடந்த வாரம் ஏற்பட்ட பூகம்பத்தால் மோசமாக பாதிக்கப்பட்டது.

இந்த பூகம்பத்தில் 24 பேர் பலியாகினர். மீட்புப் பணிகள் இன்னும் நிறைவடையாத நிலையில் நேற்று முன்தினம் இந்நகரை புழுதிப்புயல் தாக்கியது. ஏராளமான மரங்கள் சாய்ந்தன.

நகரம் முழுவதும் புழுதி மூட்டமாக காணப்படுவதால் மக்கள் சுவாசிக்க சிரமப்படுகின்றனர். இதனால் அவர்களுக்கு சுவாசக் கருவிகள் வழங்கும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

புழுதி மூட்டத்தால் தெளிவான வழி கிடைக்காததால் மீட்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. மக்கள் முகமூடி அணிந்தபடி வீதிகளில் நடமாடி வருகின்றனர். புழுதி படலத்தை தணிக்க தண்ணீர் லொறிகள் மூலம் வீதிகளில் தண்ணீர் விசிறப்பட்டு வருகிறது. (ஸ்ரீ-2)



ஜேர்மனியின் ஹான் ஓவர் நகரில் தகவல் தொழில்நுட்ப கண்காட்சி இடம்பெற்றது. இதில் மடித்து வைத்துக் கொள்ளும் வகையிலான கணனி கீபோர்ட் அனைவரையும் கவர்ந்தது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...


# பாதீனியம் களையும் யாழ்.மாவட்டத்தில் அதன் பரம்பலும்

**தாவரவியற் பெயர்:-**Parthenium hystrophorous

**தாவரக்குடும்பம்:-**Composital

**வேறு பெயர்கள்:- இந்தியன் கஞ்சா, கரட்களை**

எமது பிரதேசங்களில் காணப்படுகின்ற ஆக்கிரமிப்புக் களையான பாதீனியம் பல நாடுகளிலும் பிரச்சினைக்குரிய அதி கெடுதல்லான களையாகக் காணப்படுகிறது. இது எமது நாட்டிற்குரிய களையினம் அல்ல.




1810 ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட கோதுமை மூலம் இந்தியாவிற்கும், பின்னர் 1987 ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கை வந்தபோது, அவர்கள் தங்கள் உணவிற்காக கொண்டுவந்த செம்மறி ஆடுகளின் உரோமங்களுடனும், அவற்றின் மலக் கழிவுகள் மூலமும் கடுகு விதைகளினூடும் அக்கொடிய களை இலங்கைக்கு அறிமுகமானதாக நம்பப்படுகிறது.

இலங்கையின் வட பகுதிகளான யாழ். குடாநாடு , வவுனியா , முல்லைத்தீவு பகுதிகளிலும் கிழக்கில் திருகோணமலையிலும் தெற்கே பதுளை, பண்டாரவளை, அநுராதபுரம் பகுதிகளிலும் இக்களையின் பரம்பல் காணப்படுவதாக பதியப்பட்டுள்ளது. இருப்பினும் யாழ். குடாநாடு , வவுனியா மாவட்டங்களில் இக்களையானது மிகவும் உயர் அடர்த்தியில் பயிர் நிலங்கள், வயல் நிலங்கள், வீதியோரங்கள் மற்றும் தரிசு நிலங்களை ஆக்கிரமித்து விவசாயத்திலும், பொது சுகாதாரத்திலும் பாரிய பிரச்சனையாக விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது.

### பாதீனியம் களையின் தோற்ற இயல்புகள்

இக் களை இடத்துக்கிடம் , நாட்டுக்கு நாடு வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. நம்மவர்கள் இதனை ``இந்தியன் கஞ்சா'' என அழைக்கின்றனர்.

பாதீனியம் ஒரு பருவத்திற்குரிய அகன்ற இலை கொண்ட நச்சுக்களையாகும். இது நிமிர்ந்தது, சுமார் 4 அடி உயரம் வரை வளரக் கூடியது, ஆழமான ஆணிவேர் தொகுதி கொண்ட இருவித்தலைக்குரிய களையாகும்.

இதன் இலைகள் செவ்வந்தியின் இலைகளை போன்று அல்லது கஞ்சா செடியினைப் போன்று காணப்படும். இதன் இலைகளிலும் , தண்டிலும் ஏராளமான நச்சுச் சுணை மயிர்களைக் காணலாம். நன்கு சடைத்து வளரக் கூடிய இதன் தண்டுகள் பல எண்ணிக்கையில் கிளைத்து அவற்றின் நுனிகள் ஒவ் வொன்றிலும் வெண்ணிறமான ஏராளமான பூந்துணர்களைக் கொண்டிருக்கும்.

### பூக்களும் வித்துக்களும்

பூக்கள் ஒவ்வொன்றும் 4 மில்லி மீற்றர் விட்டம் கொண்டவை, ஒவ்வொரு பூவும் 4-5 வரையான , கருமையான , 2 மில்லிமீற்றர் நீளமான ஆப்பு வடிவ வித்துக்களைக் கொண்டிருக்கும். இவ் வித்துக்கள் காற்றில் பரவத்தக்கதாக பாரம் குறைந்தவை யாகவும், விலங்குகளிலும், வாகனங்களி லும் பற்றிக் கொள்ளக்கூடியதாக மெல்லிய செதில்களைக் கொண்டிருக்கும்.

ஒரு தாவரம் பருவமொன்றில் 5000 - 10000 வரையிலான வித்துக்களை உருவாக்கும் . இதனால் இது துரிதமாக பெருகக் கூடியது. இவற்றின் விதைகள் உயர்ந்த முளைத் திறனைக் கொண்டிருக்கும். அத்தோடு முளைப்பதற்கு பாதகமான காலம் நிலவும் போது 4-5 ஆண்டுகள் வரை உறங்கு நிலையில் இருந்து விட்டு பின்னர் சாதகமான காலத்தில் முளைத்து வளரும் ஆற்றல் கொண்டவை.

### பாதீனியத்தின் வாழ்க்கைக்காலம்

இக்களையின் வாழ்க்கைக் காலம் 6-8 மாதங்களாக இருந்தாலும், கட்டுப்படுத்தப்படாத போது ஒரு காணியில் பலகாலம் நீடித்து காணப்படுவதால் பல்லாண்டு களை போல் இது செயற்படுகின்றது.

அங்குரத் தொகுதி வெட்டப்பட்டாலும், மீண்டும் துரிதமாகத் துளிர்த்து வளரக்கூடியது. இக்களை ஓராண்டில் மார்கழி, தை, மாசி மாதங்களில் முளைத்து; சித்திரை , வைகாசி, ஆனி மாதங்களில் பூத்து விதைகளை உருவாக்கும். பின்னர் ஆடி, ஆவணி மாதங்களில் முதிர்களைகள் இறந்து விடும். இருப்பினும் , சாதகமான மழைவீழ்ச்சி , ஈரப்பதன் , வெப்பநிலை என்பன உள்ளபோது இவை ஓராண்டின் எந்தக் காலப்பகுதியிலும் வளர்ந்து பூக்களை உருவாக்கும்.

இக்களை பாதகமான காலநிலைகளை சகித்து வளரக்கூடியது. குறிப்பாக கடுமையான வரட்சி நிலவுகையில் இவை முளைத்து 4 வாரங்களில் பூத்து இலைகளை உருவாக்கும் அதீததிறன் கொண்டவை. இக்களைகள் அனைத்து மண் வகைகளிலும் செழிப்பாக வளரக்கூடியன. இருப்பினும் உவர் தன்மையான மண்ணில் வளர்ச்சி வீதம் சற்றுக் குறைவாக காணப்படும்.

### விதைகளின் பரம்பல்

இவற்றின் விதைகள் நீரினாலும், காற்றினாலும், விலங்குகளின் மூலமும், வாகனங்களின் சில்லுகள் மூலமும் , விவசாய இயந்திரங்கள் மூலமும் இடத்துக்கிடம் விரைவாக பரவக்கூடியன. குறிப்பாக வெள்ளப்பெருக்கு நிலைமைகள் இவற்றின் பரம்பலை அதிகரிக்கிறது.மேலும் விவசாய விளை பொருட்களின் மூலம் இவற்றின் பர ம்பல் குறிப்பிடத்தக்களவு இடம்பெறுகின்றது.

### பாதீனியத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள்

★ இக்களையானது மற்றைய களைகளைப் போல் இல்லாது உயர் இனப் பெருக்கத்திறன் கொண்ட வீரியமான களையாகும். விரைவான வளர்ச்சி வீதம் கொண்டவை. இதனால் அனைத்து பயிரினங்களுடனும் நீர் , கனியுப்புக்கள் , இடம், சூரியஒளி , ஒட்சிசன், காபனீரெட்சைட் போன்றவற்றிக்கான போட்டி இருக்கின்றன. இதன் விளைவாக பயிர்களின் வளர்ச்சி குறைக்கப்பட்டு விளைச்சல் வெகுவாக பாதிப்படைகிறது. உற்பத்திச் செலவு அதிகரிக்கின்றது.



★ இக்களையின் தண்டு , இலை , வேர் , பூந்துணர் ஆகிய பகுதிகளில் காணப்படுகின்ற "பார்த்தெனின்" (Porthenin) என்னும் நச்சுப் பொருள் விளை நிலங்களில் கலந்து பயிர் விதைகளின் முளைத்திறனை வெகுவாக பாதிக்கிறது.

★ "பார்த்தெனின்" நச்சுப் பொருள் பயிர் நாற்றுக்களின் வேர் வளர்ச்சி , அங்குர வளர்ச்சி என்பனவற்றை பாதிப்பதோடு பயிர்களின் பூக்கும் இயல்பையும் நிரோதிக்கின்றன.

★ சில பயிரினங்களின் மகரந்தச் சேர்க்கை, கருக்கட்டல் போன்ற செயற்பாடுகள் இக்களையினால் நிரோதிக்கப்படுகின்றன. குறிப்பாக தக்காளி , கத்தரி பயிர்களில் பாதீனியத்தின் மகரந்த மணிகள் உதிர்க்கப்படுவதால் அவற்றின் காய்த்தல் அளவு பாதிக்கப்படுகின்றது.

★ பாதீனியம் களைகள் சருமத்தில் பட்டால் நமைச்சலும், எரிவும், ஒவ்வாமை அறிகுறிகள், சருமநோய்கள் என்பன ஏற்பட வாய்ப்புகள் அதிகம். சிலருக்கு சுவாசம் சார்ந்த கோளாறுகளையும் ஏற்படுத்தும் வாய்ப்பு உண்டு.

★ பாதீனியத்தை உணவாக்கும் ஆடு, மாடு போன்ற விலங்குகளிற்கு நோய்கள் ஏற்பட இடமுண்டு. அவற்றின் பால், இறைச்சி என்பனவற்றில் பாதீனியத்தின் நச்சுப் பொருள் கலந்திருப்பதாக அறியப்படுகிறது.

★ பாதீனியத்தின் நச்சு மயிர்கள் மற்றும் விதைகள் பயிர்விளைவுகளை குறிப்பாக தானியங்களை மாசாக்கம் செய்கின்றன.

### யாழ்.மாவட்டத்தில் பாதீனியம் களையின் பரம்பல்

யாழ்.மாவட்டத்தின் தீவகம் தவிர்ந்த ஏனைய பெரும் பகுதிகளான யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பகுதிகளில் இக்கொடிய களையின் பரம்பல் அவதானிக்கப்பட்டுள்ளது.

தீவகப்பகுதிகளில் இக்களையின் பரம்பல் இதுவரை அவதானிக்கப்படவில்லை. இருப்பினும் இனிவரும் காலங்களில் இக்களை பண்ணை வீதியூடாக தீவகத்தினுள் நுழைவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக வீதிப்புனரமைப்பு பணிகளின் போது கொட்டப்படும் மண்களின் ஊடாகவும் ஏனைய வாகனப் போக்குவரத்துகள் மூலமாகவும் பரம்பலிற்கான சாத்தியங்கள் அதிகமாக உள்ளன.

**பா.பிரதீபன்,**
செய்முறை வழிகாட்டுநர்,
இரசாயனவியற்துறை,
விஞ்ஞான பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வலிகாமம் பெரும் பகுதியை நோக்கும் போது இதுவே! யாழ்ப்பாணத்தில் பாதீனியக்களையின் தேக்கமாகத் திகழ்கிறது. வலி.வடக்கு, வலி.கிழக்கு, வலி.தெற்குப் பகுதிகளில் இக்களை தீவிரமாக பரவியுள் ளது. வலி.தென்மேற்குப் பகுதியில் தற்போது சில இடங்களில் மாத்திரம் பரம்பியுள்ளது.

வலி.கிழக்குப் பகுதியான கோப்பாய் மற்றும் அதனை அண்டிய பகுதிகள் எங்கும் பாதீனியம் களை கடல் போல் காட்சி தருகிறது. (தொடரும்)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 37

A+B+C=D+E+F ஆகவும்

$A^2+B^2+C^2=D^2+E^2+F^2$ ஆகவும் வருமாறு சாத்தியமான இரு இலக்கதானங்கள் A,B,C,D,E அத்துடன் F இனைக் காண்க?

**விடைகளை 15.03.2011 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Mr. S.Selvarajan
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Mathematics & Statistics,
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 36க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**சிவக்கொழுந்து தெட்சணாமூர்த்தி குப்பிளான், ஏழாலை.**

**புதிர் 36 இற்கான கேள்வியும் விடையும்:**

$D=D, D^2=10C+D, D^3=100B+10C+D$

$D^4=100A+10C+D$ ஆயின் A+B+C+D இன்பெறுமானம் யாது?

A+B+C+D= 6+1+2+5=14

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல . 37

சரியான விடை :..........................................
முழுப்பெயர் :..........................................
முகவரி :..........................................
:..........................................
தொ.பே. இல :..........................................
கையொப்பம் :..........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்மாசன நிலையில் அடக்கம் செய்யப்பட்ட சுவாமி பிரேமானந்தா

## பூமியெங்கும் நீதிப்பசி.... புறப்பட்டு விட்டான் ராஜரிஷி



கடந்த பெப்ரவரிமாதம் 21ஆம் திகதி பிரேமானந்தா சிகிச்சை பலனளிக்காமல் இறந்து போனார். 17 வருடங்களாக சிறையில் இருந்தவர், 'என்னைத் திட்டமிட்டு அரசியல் சதி செய்து ஜெயிலுக்கு அனுப்பிய புள்ளிகள், இன்னும் வெளியே நடமாடிக்கொண்டு இருக்கிறார்கள்' என கோமா நிலைக்குப் போகும் முன்பு, உடன் இருந்த பக்தர்களிடம் திரும்பத் திரும்பச் சொன்னாராம். ஆனால், கடைசி வரை அவர்கள் யார் என்பதைச் சொல்லாமலே போய்விட்டார்!

இறப்பதற்கு சில நாட்கள் முன்பு, 'பூமியெங்கும் நீதிப் பசி... புறப்பட்டு விட்டான் ராஜரிஷி' என்கிற வரிகளை எழுதிக் கொடுத்த பிரேமானந்தா, 'இதுதான் நாம் ஆரம்பிக்கப்போகிற பத்திரிகையின் துணைத்தலைப்பு. பேரு என்ன வேணும்னாலும் வெச்சுக்க. நான் நியாயப் பசியில் தவிக்கிறேன். என்னைச் சுற்றிலும் நடந்த அரசியல் சதிகளைப் பற்றி நமது பத்திரிகையில் எழுத வேண்டும்!' என்ற ஆசையைத் தெரிவித்திருந்தார். இத்தனை வருடங்களாக மனதில் புதைத்துவைத்திருந்த சதி ரகசியங்களை எல்லாம் பத்திரிகை மூலம் அம்பலப்படுத்தப்போகிறார். என்ற ஆவலில் இருந்தார்கள் அவர் பக்தர்கள்.

ஆனால், பெப்ரவரி மாதத் தொடக்கத்தில் அவரது உடல்நிலை மோசமாகி... கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்தால்தான் உயிர் பிழைப்பார் என்கிற நிலை உருவானது. அதற்கான ஏற்பாடுகள் நடந்தபோதே, கோமா நிலைக்குப் போனார். அதற்கு முன்பு, அருகில் இருந்தவர்களின் கைகளைப் பற்றிக்கொண்டு, "என்னை சென்னை ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு மட்டும் கொண்டுபோகாதீங்க. என்னைக் கொன்னுருவாங்க. முன்னாடி அங்கே போனப்ப, ஏதோ ஊசி போட்டாங்க. அதுக்கு அப்புறம்தான், என் உடல் ரொம்பவும் மோசமானது..." என்று வேதனையில் அழுதாராம். அதன் பிறகே சென்னையில் வேறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

உடல்நிலை சரியில்லாத நேரத்திலும், பக்தர்கள் சிலருக்கு கடிதங்கள் எழுதியிருக்கிறார் பிரேமானந்தா. அவர் எழுதிய சில கடிதங்களைப் பார்த்தோம்.

'இருண்ட கார்மேகத்தால் சூரியன் மறைக்கப்பட்டாலும், மேகம் விலகி, கதிரவன் வெளிப்படுவது எத்தனை நிச்சயமோ, அதேபோல்தான் என் வாழ்வில் சூழ்ந்த இந்தப் பழிகள், நீதி விரும்பிகளின் முயற்சியால் விலகப் போகிறது. இதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

"தமிழனுக்குத் தமிழனே சதி செய்தான்" என்று சொன்னால், தமிழ்க் குலத்தை இகழ்வதுபோல்! அந்நிய சதிகள் எனக் கூறி, தமிழ்ப் பற்றை விடாமல் இருப்போம். (தனது பிரச்சனைக்கு வெளிநாட்டு சதியே காரணம் என முன்பு சொல்லியிருந்தார்.) எனது வழக்கில் உண்மையில் அரசியல் நாடகம் அரங்கேற்றப்பட்டது" என்று எழுதி இருக்கிறார் ஒரு கடிதத்தில்.

இன்னொரு கடிதத்தில், 'என் மீது வழக்குத் தொடுக்கப்பட்ட காலகட்டத்தில் வழக்கின் சூழல்களையும், அதன் பின்னணியில் செயல்பட்ட அரசியல் பெரும்புள்ளிகளின் தலையீடுகளையும், அதன் தொடர்ச்சியாக நடந்தேறிய சம்பவங்களையும் தெரியவந்தால், வியப்பின் எல்லைக்கே போய் விடுவீர்கள்! நடக்காத கற்பழிப்புகள், இயற்கை மரணத்தையே கொலையாக மாற்றி, அவற்றை நீதிமன்றத்தில் நிரூபிக்கும் அளவுக்குச் செயற்பாடுகள் தீவிர மடைந்திருந்ததை நீங்கள் நிச்சயமாக அறிய வேண்டும்...' என்று நீள்கின்றன. கடிதவரிகள்!

அந்தக் காலகட்டத்தில், பிரேமானந்தாவின் ஆசிரமம் இருந்த இடத்தை விலைக்குக் கேட்ட அரசியல் புள்ளிகள், அங்கே புதிதாக மருத்துவக் கல்லூரி கட்ட விரும்பினார்களாம். ஆனால், பிரேமானந்தா மறுத்துவிடவே, சதிவலை பின்னப்பட்டதாக அவரின் பக்தர்கள் சொல்கிறார்கள். இந்த உண்மைகளை நன்றாகத் தெரிந்தவர் ஒரு ஓய்வுபெற்ற போலீஸ் அதிகாரியாம். பல உண்மைகள், ஆதாரங்களை அவர் வைத்துள்ளாராம். என்றாவது ஒரு நாள் அவர் மூலம் எல்லாமே வெளி உலகுக்கு அம்பலமாகும் என்று பிரேமானந்தா சொல்லியிருக்கிறார்.

யார் அந்த போலீஸ் அதிகாரி? எப்போது அம்பலமாகும்? என்ற விடை கிடைக்காத வினாவுக்கு மத்தியில், கடந்த 22 ஆண்டுகளுக்கு முன்பு. விராலிமலை அருகே உள்ள பாத்திமா நகரில் 40 ஏக்கரில் ஆசிரமம் தொடங்கி... 2 லட்சம் மாங்கன்றுகளும் நட்டார் பிரேமானந்தா.

அங்கே குடில் அமைத்துத் தங்கி ஆன்மிகப் பணிகளைக் கவனித்து வந்த காலகட்டத்தில்தான் பல்வேறு சர்ச்சைகளில் சிக்கினார். கைதாகி ஜெயிலுக்கும் போனார்.

பிரேமானந்தா நட்டுவைத்த கன்றுகள், இன்று பெரிய மரங்களாக உயர்ந்து நிற்கின்றன. பெப்ரவரி 21ஆம் திகதி பிரேமானந்தாவின் உயிர் பிரிந்த நேரம், ஆச்சிரமத்தின் தென் பகுதியில் இருந்த பசுமையான மா மரம் ஒன்று குபீரெனத் தீப்பற்றி, தானாகவே அணைந்ததாம்.

ஒருவார காலம் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த பிரேமானந்தாவின் உடல், கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி பகல் 12 மணியளவில், பக்தர்கள் கட்டிய அந்தக் கோயிலில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவர் கூறியிருந்தபடியே, பத்மாசன நிலையில் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

## மெய்வல்லுநர் போட்டிகள்

யா/செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சி.ஜெயந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தாழையடி பங்குத்தந்தை வணபிதா. ஜேம்ஸ்நாதன் அடிகளார், மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.பொன்னையா, நாகர்கோயில் கட்டளை அதிகாரி கேணல் சு.ரட்ணாயக்க, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3-19)

☆ ☆ ☆

(அல்வாய்)

பருத்தித்துறை சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சென். தோமஸ் ஆலய வளாகத்தில் அதிபர் அருட்சகோதரி எஸ். ஜெயநாயகி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் மு.சிவநேசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியாரும் பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலையின் ஆசிரியருமான திருமதி சிவாம்பிகை சிவநேசன் வழங்கவுள்ளார். (ஸ்ரீ-3-19

## நகைகளைக் கொள்ளையடித்த இந்திய போலிச்சாமியார்கள்

### விமான நிலையத்தில் வைத்து கைதாகினர்

(கொழும்பு)

கொழும்பு கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் போலிச்சாமியார் வேடமிட்டு பெண்களின் நகைகளைக் கொள்ளையடித்த இந்தியர்கள் இருவர் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் சாமியார் வேடமிட்டு அதில் ஏமாந்த ஏராளமான பெண்களின் நகைகளை அவர்கள் லாவகமாகக் கொள்ளையடித்துள்ளனர். அது குறித்து பொலிஸில் ஒரு சிலரால் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அவ்வாறான நிலையில் போலிச்சாமியார்கள் இந்தியாவுக்குத் தப்பியோடவுள்ளதாக கிராண்ட்பாஸ் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து விமான நிலையத்தில் விசேட பொலிஸ் அணியொன்று கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

அதன் காரணமாக இந்தியாவுக்குத் தப்பியோட விமானநிலையம் வந்த போலிச்சாமியார்கள் இருவரும் பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டு தற்போது கிராண்ட்பாஸ் பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இருவரும் இந்தியாவின் பெங்களூரைச் சேர்ந்தவர்கள் என்றும் பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துத் தங்கள் வசம் வைத்திருந்ததும் தெரியவந்துள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

## காலாண்டிதழ் வெளியீடு

கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஊடகக் கழகத்தினால் நித்திலம் காலாண்டிதழ் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் ரி.நிலக்ஷன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலைய இணைப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வழங்குவார். (ஸ்ரீ-9)

union assurance
Trust in your tomorrow, today.

வேலைவாய்ப்பு

யூனியன் அஷ்யூரன்சின் சாவகச்சேரி கிளையில் பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு.

Financial Advisors
Agency Managers

தகைமை :-

- G.C.E O/L 6 பாடங்களில் சித்தி/ G.C.E A/L
- காப்புறுதித் துறையில் முன் அனுபவம்
- வெற்றியை நோக்கி பயணிப்பதற்கான ஆர்வம்

தென்மராட்சி பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

நேர்முகத் தேர்வு :

காலம்: சனிக்கிழமை (05.03.2011) நேரம்: 9.30 மணி

இடம்: 46, கண்டி வீதி, சாவகச்சேரி (பழைய நீதிமன்றுக்கு முன்னால்)

தொடர்பு: 0777727721, 0770253533

(3926)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி கோரல்கள்

## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## பெருந்தெருக்கள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வீதிகள், புனர் நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல் அறிவித்தல்

## பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியின் மூலம் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்

*1. பின்வரும் புனர் நிர்மாண வேலைகளிற்கான மூடிய கேள்வி கோரல்களை பிரதம பொறியியலாளர்,கேள்விச் சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர், வீதிஅபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக் கொள்வார்.*

| | வேலை | கேள்வி பாதுகாப்பு பணம் | ஒப்பந்தகாரர் தரம் |
|---|---|---|---|
| 1. | மாதனை ஸ்ரீ காளியம்மன் கோவில் வீதி புனரமைப்பு – கட்டம் I | 16,000.00 | C 8 |
| 2. | மாதனை ஸ்ரீ காளியம்மன் கோவில் வீதி புனரமைப்பு – கட்டம் II | 15,000.00 | C 8 |
| 3. | மாதனை ஸ்ரீ காளியம்மன் கோவில் வீதி புனரமைப்பு – கட்டம் III | 30,000.00 | C 7 |
| 4. | மாதனை ஸ்ரீ காளியம்மன் கோவில் வீதி புனரமைப்பு – கட்டம் IV | 14,000.00 | C 8 |
| 5. | மாதனை ஸ்ரீ காளியம்மன் கோவில் வீதி புனரமைப்பு – கட்டம் V | 30,000.00 | C 7 |
| 6. | மாதனை ஸ்ரீ காளியம்மன் கோவில் வீதி புனரமைப்பு – கட்டம் VI | 30,000.00 | C 7 |

*கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 18.03.2011 அன்று பிற்பகல் 2 மணியுடன் முடிவடையும். பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப்பத்திரங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.*

*கேள்விப்பத்திரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்களை பிரதம பொறியிலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் காரியாலயத்தில் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.*

*கேள்விப்பத்திர ஆவணங்கள் 07.03.2011 தொடக்கம் 17.03.2011 வரை மீள் அளிக்க முடியாத வைப்புத் தொகையான 750/- + பெறுமதி சேர் வரி 12 % செலுத்திப் பெற வேண்டும்.*

*2. தகுதி வாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.*

*அ.கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ரட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் மேற்குறிப்பிட்ட தரத்திற்கமைய பதிவு செய்திருத்தல் வேண்டும்.*

*03.கேள்வி கோரல் ஆவணங்கள் பின்வரும் அலுவலகங்களில் இலவசமாகப் பார்வையிட முடியும்.*

*I. மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.*

*II. பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.*

*04.முன்கேள்வி கோரல் கூட்டம் 21.03.2011 அன்று காலை 10 மணிக்கு பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை,யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.*

*05.கேள்விப் பத்திர ஆவணங்கள் கேள்விகோரல் முடிவுத் திகதியில் இருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாக இருக்கும்.*

*06.மேலே குறிப்பிடப்பட்ட கேள்விப் பாதுகாப்பு பணத்தொகை அவற்றிற்குரிய பாதுகாப்புப் பத்திரம் ஒவ்வொரு கேள்விப் பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக் கொள்ளக்கூடிய பாதுகாப்புப் பத்திரம் இல்லாத - கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.*

*07. மூடி ஒட்டப்பட்ட கேள்விப் பத்திர ஆவணங்கள் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை,யாழ்ப்பாணக் காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்திற்கு முன் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

*08. கிடைக்கப்பெற்ற கேள்விப் பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.*

*கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப் பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

*09.மேலதிக விபரங்கள் பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவுசெய்து தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.*

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|
| பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம். | 021 222 2968 |

*பிரதம பொறியியலாளர்,*
*வீதி அபிவிருத்தி அதிகார சபை,*
*கடற்கரை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*(சி-2582)*

# வல்வெட்டித்துறை மத்திய பேருந்து நிலையம், மீன்சந்தை திறப்புவிழா

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தி னால் வல்வெட்டித்துறை மத்திய பேருந்து நிலை யம், மீன் சந்தை திறப்பு விழா நாளை சனிக் கிழமை காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை வல்வெட்டித்துறை மத்திய பேருந்து நிலையத்தில் நகராட்சி மன்ற செயலாளர் திருமதி லி.சந்திரமோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக் ளஸ் தேவா னந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி சிறப்பு விருந்தினர் களாக வட மாகாண உள்ளூராட்சி, நிவாரண மற்றும் புனர்வாழ்வு, கூட் டுறவு, கிராம அபிவிருத்தி, கைத் தொழில், சமூக சேவைகள், நன்ன டத்தை சிறுவர் பராமரிப்புச் சேவை கள் அமைச்சின் செயலாளர் திரு மதி ர.விஜயலட்சுமி, வடக்கு மாகாண உள்ளூராட்சிஆணையாளர்எவ்ஜோன் சன், யாழ்.பிராந்திய உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் திருமதி வ.மது மதி ஆகியோர் கலந்து சிறப் பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் நகராட்சி மன்றத் தினால் நடத்தப்பட்ட ஆங்கில வகுப் பிற்கான சான்றி தழ் வழங்கப்பட வுள்ளது. (ஸ்ரீ-9)

# சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

சப்ரகமுவ பல்கலைக்கழகம் கால வரை யறையின்றி மூடுவ தற்கு நிர்வாகம் எடுத்த தீர்மான த்தை எதிர்த்து சப்ரகமுவ பல்கலை க்கழக மாணவர்கள் நேற்று நண் பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழக த்தை உடன் மீண்டும் திறக்குமாறு கோரியே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மாணவர்கள் தொடர்ந்து வகுப் புப் பகிஷ் கரிப்பில் ஈடுபட்டதன் கார ணமாக பல்கலைக் கழகத்தை கால வரையறையின்றி மூடுவ தற்கு நிர் வாகம் தீர்மானித்தமை குறிப்பிடத் தக்கது. (ஸ்ரீ-2)


## யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்
## இல்ல மெய்வல்லுநர் போட்டி–2011

காலம்: சனிக்கிழமை 05.03.2011
நேரம்: பிற்பகல் 1.00 மணி இடம்: பாடசாலை மைதானம்

தலைவர்
திரு.K.கனகராஜா (அதிபர்)
பிரதம விருந்தினர்
மேஜர் ஜெனரல் மகிந்த கத்துருசிங்க
(யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி
சிறப்பு விருந்தினர்கள்
திரு. A.ரஜேந்திரன்
(வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர்)
திரு. S.கைலாசநாதன்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழை)
கௌரவ விருந்தினர்
திரு. V.ஞானோதரன் (வயவன்)
(முகாமையாளர்,DFCC & DV வங்கி)

அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

(சி-2579) பாடசாலைச் சமூகம்



## PRINCESS OF WALES NURSING HOME
(Jaffna)
132,Kokulam Kachcheri Nallur Road,
Jaffna , Sri Lanka.
Phone+94(21)2226179, +94(21)2226180
princesshosp@gmail.com
Rgd No Nal/DS/774

### அமைதியான சூழலில் மகத்தான வைத்திய சேவையும் முதியோர் பராமரிப்பு இல்லமும்

விசேடமாக மகப்பேற்று (IVF, Programme) (Dr.Daviselvarajah) சம்பந்தமான ஆலோசனைகளும், சிகிச்சைகளும், நீரிழிவு நோய்க்கான ஆலோசனைகளும் சிகிச்சைகளும் வழங்க மிக விரைவில் இந்தியாவில் இருந்து வைத்திய நிபுணர்கள் வருகை தரவுள்ளார்கள். உங்கள் பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

- வெளிநோயாளர் பிரிவு (OPD) காலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை வைத்தியர்களால் பார்வையிடப்படும்.
- விசேட வைத்திய நிபுணர்களின் சேவையும் சிகிச்சையும்
- நவீன ஸ்கானிங் (Scan) வசதி ECG
- சகல விதமான இரத்த, சல பரிசோதனைகள்

நீரிழிவுக்கான இரத்தப் பரிசோதனை இலவசமாக 05.03.2011 சனி காலை 6.30 -10.30 வரை செய்து கொடுக்கப்படும்.

**Medical Director**
**Princess of Wales Hospital**
132, Kachcheri Nallur Road, Jaffna.
எங்கள் சேவை உங்கள் ஆரோக்கியம்
(சி-2581)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது உண்மை நங்கூரம் பாய்ச்சிய கப்பலை போல அமைதியுடன் இருக்க வேண்டும்.

-புத்தர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பொய்யுரைத்தே பிரிவினை வளர்த்தீர் போதும்...

உண்மைக்கு மெய்ப்பொருள் என ஒரு பெயர் உண்டு. மெய் என்பது எந்தக் காலத்திலும் அழிவில்லாதது. பொய்களால் மறைக்கப்பட்டாலும் பொய் அழிந்து போக உண்மை வெளிப்படும். எனினும் இந்த உண்மையை பலர் உணரத் தவறிவிடுகின்றனர்.

இந்தத் தவறை சாமானியர்கள் செய்தால் பரவாயில்லை. துரதிர்ஷ்டவசமாக ஆட்சியில் இருப்பவர்கள் தொடக்கம் ஆன்மிகம் சார்ந்தவர்கள் வரை விட்டுவிடுவதுதான் வேதனைக்குரியது.

ஒரு பொய்யை ஆயிரம் தடவைகள் உச்சரித்தால் அது மெய்யாகிவிடும் என்பது அதிகார பலத்தில் இருப்பவர்கள் நினைத்துக்கொள்ளும் பிரமையே அன்றி அதில் எந்த உண்மையும் கிடையாது. இலங்கையைப் பொறுத்தவரையிலும் இந்த நாட்டில் நடந்த அத்தனை அநியாயங்களுக்கும்-அட்டூழியங்களுக்கும்-அழிவுகளுக்கும் உண்மையை மறைத்து பொய் உரைத்தமையே மூலகாரணமாகும்.

சிங்கள, தமிழ் இன விவகாரம் என்பது இங்கு இருந்தமை உண்மையாயினும் சிங்கள, தமிழ் உறவுகளும் ஓரளவு திருப்தியாக இருந்ததென்பதை மறந்து விடமுடியாது.

ஆனால், இலங்கை அரசுகள் தமிழ்மக்கள் தொடர்பில்-அவர்களுக்கு நடந்த அநீதிகள் தொடர்பில் எப்போது பொய் உரைக்கத் தலைப்பட்டனவோ அன்றிலிருந்துதான் தமிழ் மக்கள் இந்த நாட்டின் ஆட்சி தலைமைக்கு சிங்களவர்கள் பொருத்தமற்றவர் என்ற முடிபை இறுக்கமாக எடுத்துக் கொண்டனர். தங்களின் முடிபு நிறைவேற வேண்டுமாயின் அதற்கான ஒரேவழி பிரிந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்று திடமாக நம்பின ர்.

இனப்பிரச்சினைகளின் மத்தியில் ஆட்சித் தலைமைகள் உரைத்த பொய்கள் 'இலங்கை எமது நாடு' என்று தமிழ் மக்கள் நினைக்க முடியாத அளவிற்கு அருவருப்பைக் கொடுத்தது.

நவாலி தேவாலயத்தில் நடந்த விமானக் குண்டுத்தாக்குதல், வடமராட்சியில் யுத்த விமானங்கள் நடத்திய கொடூரங்கள், வன்னிப் போரில் போர் விமானங்கள் நடத்திய பயங்கரங்கள் என அனைத்தும் 'உண்மை' என அரசு தலைமைகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந் நிலையில்தான் தமிழ்-சிங்கள இன வக்கிரத்தை உச்சத்திற்கு கொண்டு சென்றன.

ஆக, என்று பொய்யுரை நின்று உண்மை உரைக்கப்படுகிறதோ அன்றுதான் இந்த நாட்டிற்கு விமோசனம்.

# கழிவு உலோகப் பொருட்களை வழங்க கைத்தொழிலாளரை பதிவு செய்தல்

அரசநிறுவனங்களிலிருந்து கழித்தொதுக்கப்படும் செப்பு, பித்தளை, வெண்கலம் அலுமினியம் கலந்த உலோகம், அலுமினியம், ஈயம் போன்ற இரும்பல்லாத உலோகப் பாகங்களும் விசேட வகையான இரும்பு, வார்ப்பிரும்பு மற்றும் உருக்குக் கழிவுகளும் தேசிய கைத்தொழில் முயற்சியாளர்களின் மூலப்பொருள் தேவையை ஈடுசெய்யும் நோக்கத்துக்காக இலங்கை கைத் தொழில் அபிவிருத்தி சபைக்கு வழங்கப்படவேண்டும் என அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இவ் வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் பொருட்டு கழிவுலோகப் பொருட்கள் தேவைப் படும்புதியகைத்தொழில்முயற்சியாளர்களைப் பதிவு செய்வதற்கும் ஏற்கனவே பதிவு செய்துள்ளகைத்தொழில்முயற்சியாளர்களின்பதிவை புதுப்பிப்பதற்கும் இலங்கைக் கைத் தொழில் அபிவிருத்தி சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆகவே கழிவு உலோகப்பொருட்கள் தேவைப்படும் கைத்தொழில் முயற் சியாளர்கள் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை மாவட்ட அலுவலகத்தில் விண்ணப் பப்படி வங்களைப்பெற்று எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் தேசிய வீடமைப்பு கட்டடம், சுண்டுக்குளியில் உள்ள கைத்தொழில் அபிவிருத்தி சபை மாவட்ட அலுவலகத்தில் விண்ணப்பங்களை கையளிக்குமாறு பிரதிப்பணிப் பாளர் எஸ்.சிவகெங்காதரன் தெரிவித்தார். (சு)

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## உத்தரத்தின் சிறப்பு

வைகாசி விசாகம்,ஆடிப்பூரம், ஆவணி அவிட்டம், கார்த்திகையில் வரும் கார்த்திகை, தைப்பூசம் ஆகிய சிறப்பு நட்சத்திரங்களின் வரிசையில் வருவது பங்குனி உத்தரம் ஆகும். இந்த நாளில்தான் சிவ - பார்வதி திருமணம், முருகன்- வள்ளி திருமணம், சாஸ்தாவின் பிறப்பு ஆகியவை இந்த நட்சத்திர தினத்தில்தான் நடந்தது.

சாஸ்தா அவதாரம் எடுத்தது பங்குனி மாதம் உத்தர நட்சத்திரத்தில் ஆகும். மகிஷி என்ற அரக்கியை அழிக்க தேவர்கள் விரும்பினர். அவளை ஆணுக்கும், பெண்ணுக்கும் பிறக்காத ஒருவரே அழிக்க முடியும் என்பதால், விஷ்ணு மோகினி வடிவெடுத்து சிவனுடன் இணைந்து பெற்ற மகனே தர்மசாஸ்தா. இவர் மகிஷியை அழித்தார். ஐயப்பனின் அவதாரமாகக் கருதப்படுவது

## சபரிமலையில் விசேட பூஜை

சபரிமலையில் சாஸ்தாவின் ஜென்ம நட்சத்திரத்தை ஒட்டி பங்குனி உத்தரத்திற்கு முதல் நாள் மாலை 5.30 மணிக்கு நடைதிறக்கப்படும். உத்தரத்தன்று அதிகாலை 4.30 மணிக்கு நடை திறக்கும். அன்று முழுவதும் சிறப்பு பூஜை செய்யப்படும். கூட்டம் அதிகம் இராது என்பதால் ஐயப்பனை நிம்மதியாகத் தரிசிக்கலாம்.

# பாரம்பரிய தமிழ் கூத்துக்கள் ஆற்றுகை

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கலை வட்டம் மற்றும் நுண் கலைத் துறையின் ஆதரவில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு பாரம்பரிய தமிழ்க் கூத்துக்கள் நடத்தப் படவுள்ளன.

இந்நிகழ்வில் பாரம்பரிய வசந்தன் கூத்து,கோவலன் கூத்து, காத்தவராயன் கூத்து ஆகியவற்றின் தேர்ந்தெடுக்கப் பட்ட பகுதிகள் ஆற்றுகை செய்யப்பட வுள்ளன.

கலை ஆய்வாளர்களும் நாடக அரங்க மாணவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு நுண் கலைத்துறைத் தலைவர் கலாநிதி ஏ.என்.கிருஷ்ணவேணி கேட்டுக் கொள்கின்றார். (ஸ்ரீ-9)

# காலாவதியான பொருட்களை வைத்திருந்த வர்த்தகர்களுக்கு அபராதம் விதிப்பு

(கரவெட்டி)

சாவகச்சேரி நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் அறுவருக்கு எதிராக சுகாதாரப் பிரிவினால் சாவகச்சேரி நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேற்படி ஆறு வர்த்தகர்களும் தமது கடையில் காலாவதியான பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இவ்வழக்கு நேற்று சாவகச்சேரி நீதி மன்ற நீதிபதி மாணிக்கவாசகம் கணேசராசா முன்னிலையில் விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 6 வர்த்தகர்களுக்கும் தலா 3000 ரூபாய் அபராதமும் செலுத்தத்தவறின் 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கி நீதிபதி உத்தரவிட்டார் அத்தோடு காலாவதியான பொருட்களை அழிக்க சம்பந்தப்பட்ட தரப்பிற்கு கட்டளையிட்டார். (ஸ்ரீ-3-24)

# வெள்ளி நற்சிந்தனை



09

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

மணிவாசகர் உலக இன்பங்களில் திளைத்திருந்தவர். முதன் மந்திரி என்ற பதவியால் அரசபோக வாழ்க்கை வாழ்ந்தவர். ஆனால் அவருடைய சிறப்பான வாழ்வு ஒரு பக்தியனுபவத்தால் முற்றாக மாற்றமடைகிறது. அந்த மாற்றத்தை அவர் ஏற்றுக்கொண்ட மனப்பக்குவம் எமக்குப் பெருவியப்புத் தருவது. இன்றைய உலக இன்பங்களையெல்லாம் அனுபவிக்க முடியவில்லையே எனப் பலர் துன்பப்படுகின்றனர். மேலும் பெற்றிருந்த வசதியான வாழ்வை இழந்தவுடன் மன முடைந்து விடுகின்றனர். நாம் இத்தகையதொரு நிலைக்கு ஆளாகும் போது எப்படி எம்மைத் தேற்றி வாழ்க்கையை மேற்கொள்ளலாம் என்பதை மணிவாசகர் பாடலிலே விளக்கியுள்ளார்.

தனக்கும் இறைவனுக்குமிடையே ஏற்பட்ட தொடர்பை மீண்டும் நினைத்துப் பார்க்கிறார். இறைவனைப் பற்றி அவர் அறிந்திருந்தவற்றையெல்லாம் வரிசைப்படுத்திப் பார்க்கிறார். இறைவன் உலகத் தோற்றத்திற்கு நிமித்த காரணமானவன். அதனால் பவன் என அழைக்கப்படுபவன். பவன் என்பது இறைவனது அட்டமூர்த்தீஸ்வரர்களது திருநாமங்களில் ஒன்று. உலகத் தோற்றத்திற்கு காரணமாயுள்ளவன் என்பது இதன் பொருளாகும். பவன், சர்வன், ஈசானன், பசுபதி, உருத்திரன், உக்கிரன், பீமன், மகாதேவன் என்பன இறைவனுடைய அட்டமூர்த்தீஸ்வர நாமங்களாகும்.

எம்பிரானும் குளிர்ச்சியும் பெருமையும் பொருந்திய மூன்றாம் பிறைத் திங்களைத் தலையிலே மாலையாகச் சூடியவனும் ஆகிய சிவபெருமான் மணிவாசகருடைய நினைவிலே நிறைந்து நிற்கிறான். தெய்வீகத் தோற்றம் மனித நிலையோடு தொடர்பு கொள்ள இடையூறாக அமையும் எனக் கருதியே இறைவன் தன்னைக் குருவாக வந்து ஆட்கொண்டான் என்பதை மணிவாசகர் நன்குணர்ந்து கொண்டார். பெரியோனாகிய இறைவன் எங்கள் ஆண்டானாகவும் சிறியேன் அவனுக்கு அடியானாகவுள்ள இந்தத் தொடர்பு உண்மையானதொரு பக்தியனுபவமாகும். தன்னைத் தாழ்த்தி இறைவன் நம்மை நாடி வரும் போது நாமும் எம்மைத் தாழ்த்தி வழிபடுவதே மனிநிறைவு தரும்.

விண்ணோர்களின் தலைவன் அடியவர் பொருட்டாகக் குரு வடிவில் வந்த பெருங்கருணையை மணிவாசகர் உணர்ந்தபோது அவரால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இதுவரை தான் இறுமாப்போடு வாழ்வு நடத்தியதை எண்ணி வெட்கப்படுகிறார். சிவன் தன்னை வலிய வந்து ஆட்கொண்ட நிலையை அவரால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. தன்னுடைய சிறுமை கண்டும் தன்னை அடியானாக்கிய பெருங்கருணைதான் இறையன்பு என்பதை நன்கு உணர்ந்து கொள்கிறார். வாழ்க்கையில் இத்தகைய பக்தியனுபவம் எல்லோருக்கும் ஏற்படலாம். உலக வாழ்க்கை என்பது நிரந்தரமானதல்ல. மனிதப்பிறவியிலே செய்ய வேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்யாமல் இருப்போருக்கு மணிவாசகர் ஒன்றை ஞாபகப்படுத்துகிறார். முன்னைய வாழ்க்கையைப் பற்றி எண்ணிப் பார்த்து வருந்துவதை விட இறைவனை அறிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். 'எம்பிரான்றெரியும்பரி சாவ தியம்புகவே' என்ற அவருடைய பாடலடி இதனைத் தெளிவாக உணர்த்தி நிற்கிறது. 'புவனெம் பிரான்' என்பதை எல்லோரும் உணர் ந்து கொண்டால் வாழ்வில் துன்ப மெதுவுமில்லையென்பதே அவர் பாடல் தரும் செய்தி.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

"பவனெம் பிரான்பனி மாமதிக்
கண்ணிவிண் ணோர் பெருமான்
சிவனெம் பிரானென்னை யாண்டு
கொண்டானென் சிறுமை கண்டும்
அவனெம் பிரானென்ன நானடி
யேனென்ன விப்பரிசே
புவனெம் பிரான்றெரி யும்பரி சாவ
தியம்புகவே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## மைக் 1...2...3...

## அயர்லாந்திடம் தோற்றதால் அதிர்ச்சியில் உள்ளேன்

### இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ரொரஸ்,



அயர்லாந்து அணியுடன் ஏற்பட்ட தோல்வி எனக்கு மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. ஏமாற்றம் தருவதாகவுள்ளது. எங்களது களத்தடுப்பு மோசமாக இருந்தது.

கெவின் ஓ பிரைன் பிடியை நான் தவறவிட்டேன். அத்துடன் மேலும் சில பிடிகள் தவறவிடப்பட்டன. இதனால் நாங்கள் தோல்வியடைந்தோம். இதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

துடுப்பாட்ட பவர் பிளேயில் எங்களது பந்து வீச்சு மோசமாக இருந்தது. கெவின் ஓ பிரைனின் துடுப் பாட்டம் அபாராக இருந்தது. துடுப் பாட்ட பவர்பிளேயை அவர் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார். இனி வரும் ஆட்டங்களில் சிறப்பாக ஆடுவோம்.

இவ்வாறு இங்கிலாந்து அணித் தலைவர் தெரிவித்தார்.

## உலகக் கிண்ண வரலாற்றிலேயே மிகச் சிறந்த வெற்றி

### அயர்லாந்து அணித்தலைவர் போர்ட்டர் மீல்ட்,



இங்கிலாந்து அணியுடன் 111 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்த பின், 327 ஓட்டங்களை விரட்டிவெற்றிபெறுவது கடினம்.

ஆனால் கெவின் ஓ பிரைன் ஆட்டத்தால் 5 ப்ந்துகளின் மீதம் வைத்து நாங்கள் வெற்றி பெற்றிருக் கிறோம்.

நம்ப முடியாத ஒரு வெற்றியை நாங்கள் பெற்றிருக்கிறோம்.

நான் பார்த்ததிலேயே மிகச் சிறந்த ஆட்டம் இது. உலகக் கிண்ண வரலாற்றிலேயே இது சிறந்த ஆட்டமாக அமைந்துள்ளது.

அயர்லாந்துக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி. 2007இல் பாகிஸ்தானுக்கு அதிர்ச்சியளித்தோம். அதையெல்லாம் விட இம்முறை இங்கிலாந்து அணியுடனான வெற்றி மிகச் சிறந்தது.

குறிப்பாக யார்டி, அன்டர் சனின் பந்துவீச்சை ஓபிரைன் சிறப்பாக ஆடினார். கடைசியில் மூனியும் தன் பங்களிப்பைக் கொடுத்ததால் வெற்றிபெற முடிந்தது. இவ்வாறு அயர்லாந்து அணித்தலைவர் போர்ட்டர் பீல்ட் தெரிவித்தார்.

## இப்படி போட்டுக் கொடுத்தா அவ்வளவுதான்....

### இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில் தேவ்,



இந்திய அணியின் பந்து வீச்சு மிகவும் பலவீனமாகவுள்ளது. அதைநான்சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை.

இந்திய வீரர்களின் பந்து வீச்சை பார்க்கும் யாராலும் அதை எளிதாக கணித்து விட முடியும். அதற்காக அவர்களை ஒரேடியாக ஒதுக்கிவிடவும் கூடாது.

கடந்த 2 ஆண்டுகளில் ஏராளமான வெற்றிகளைக் குவிக்க காரணமாக இருந்தவர்களும் இவர்கள் தான்.

பந்து வீச்சைக் குறைகூற விரும்பவில்லை என்றாலும் 338 ஓட்டங்களைக் குவித்த பின்னரும் தோல்வியின் பிடியில் சிக்கி கடை சியில் ஒரு வழியாக சமனிலை செய்ததை ஜீரணிக்க முடியவில்லை. இனிவரும் போட்டிகளில் பந்து வீச்சு மேம்படும் என நம்புகிறேன். இவ்வாறு கவில் தேவ் கூறினார்.

## இலங்கை அணி வீரர்கள் மீதான சூதாட்ட குற்றச்சாட்டு

## கிரிக்கெட் சபை நிராகரிப்பு

பாகிஸ்தான் அணிக்கு எதிரான உலகக் கிண்ண லீக் போட்டியில் மஹேல ஜெயவர்த்தனா, திலான் அமர வீர உள்ளிட்டோர் சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்பது ஆதாரமற்ற புகார் என இலங்கை கிரிக்கெட் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான உலகக் கிண்ண லீக் போட்டியில், இலங்கை அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அதிர்ச்சி தோல்வியடைந்தது.

இப்போட்டியின் போது கொழும்பிலுள்ள அரச தொலைக்காட்சி, சேவை தனது வர்ணனையில்,

இன்று ஜெயவர்த்தனா, சமரவீர இருவரும் விரைவில் ஆட்டமிழந்து திரும்புவார்கள். இலங்கை அணி தோல்வியடையும். இது கட்டாயம் நடக்கும். இதற்காக ரூ.8 இலட்சம் பெட் கட்டுகிறேன் என உள்ளூர் தொழிலதிபர் ஒருவர் கூறியதாக தெரிவித்தது.

தொழிலதிபர் சொல்லியபடியே ஜெயவர்த்தனா 2 ஓட்டங்களுடனும் சமரவீர ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். இப்போட்டியில் இலங்கை அணி தோல்வியடைந்தது. இந்தச் செய்தி நாடு பூராகவும் அதிக பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஜெயவர்த்தனா, சமரவீர உள்ளிட்டோர் மீது எழுந்துள்ள சூதாட்ட சர்ச்சை ஆதாரமற்ற குற்றச் சாட்டு. இயற்கையாக நிகழ்ந்த நிகழ்ச்சியோடு, உள்ளூர் தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பப்பட்ட வர்ணனை ஒத்துப் போனதால், யார் மீதும் குற்றம் சுமத்த முடியாது.

இலங்கை அணியினர் மீது தேவையற்ற அணியினர் மீது தேவையற்ற குற்றம் சுமத்தி, உலகக் கிண்ணத் தொடரிலிருந்து வீரர்களைத் திசை திருப்ப ஏற்படுத்தப்பட்ட சதியாக இருக்கலாம்.

இது குறித்து குறித்த தொலைக் காட்சி சேவை நிர்வாகிகளிடம் பேச உள்ளோம். இதன் மூலம் உண்மை விரைவில் வெளிவரும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



மொகாலியில் நேற்று நடைபெற்ற தென்னாபிரிக்க-நெதர்லாந்து அணிகளிற்கிடையிலான லீக் போட்டியில் தென்னாபிரிக்க ரசிகைகள் தமது அணி வீரர் அம்லா போன்று முகத்தில் தாடி வைத்து மகிழ்வித்தபோது...

**இலங்கை அரசு மறுப்பு**

இலங்கை அணி வீரர்கள் மீதான ஆட்ட நிர்ணய சதி குற்றச்சாட்டை இலங்கை அரசும் மறுத்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த,

இலங்கை அணியின் ஒவ்வொரு வீரர் மீது முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் மேற்படி குற்றச்சாட்டுகள் தனி நபர்களின் கருத்துகளாகும் எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் நம்பிக்கையையும் ஆசீர்வாதத்தையும் இலங்கை அணி வீரர்கள் கொண்டுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்துள்ளார்.

## தோனிக்கு ஆதரவு; ஐ.சி.சி. கண்டனம்

### இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பொங்கியெழுந்தது

அணித்தலைவர் மகேந்திர சிங் தோனியை விமர்சித்த ஐ.சி.சி.க்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ) காட்டமாக பதிலடி கொடுத்துள்ளது.

உலகக் கிண்ண தொடர் நடக்கும் காலத்தில் வீணாக நெருக்கடி கொடுப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

உலகக் கிண்ண தொடரில் கடந்த 27ஆம் திகதி பெங்களூரில் நடைபெற்ற, இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான லீக் போட்டி சமனிலையில் முடிபடைந்தது.

இப்போட்டியில் இங்கிலாந்து வீரர் இபன்பெல் 17 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, யுவராஜ் சிங் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ. ஆட்டமிழப்பு கொடுக்க நடுவர் பில்லி பவுடன் மறுத்தார்.

இதனையடுத்து களநடுவர் தீர்ப்பை எதிர்த்து யு.டி.ஆர்.எஸ். முறையில் நான்காவது நடுவரிடம் இந்திய அணித்தலைவர் தோனி மேல்முறையீடு செய்தார்.

ஆனால் மேல்முறையீடு செய்தும் சிறந்த முடிபு கிடைக்கவில்லை. இதன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசிய தோனி,

யு.டி.ஆர்.எஸ். தொழில்நுட்பமும் தவறு செய்கிறது என்றார்.

தோனியின் இந்தக் கருத்துக்கு சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) பொது முகாமையாளர் டேவ் ரிச்சர்ட்சன் எதிர்ப்பு தெரிவித்தார்

யு.டி.ஆர்.எஸ். முறையின் மீது தோனி குற்றம் சுமத்தமுன் அதன் விதிகளை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என ரிச்சர்ட்சக் தெரிவித்திருந்தார்.

ஐ.சி.சி.யின் இந்தக் கருத்துக்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஐ.சி.சி. தலைமை நிர்வாகி ஹாரூன் லார்கத்துக்கு பி.சி.சி.ஐ. செயலாளர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யு.டி.ஆர்.எஸ். முறையில் உள்ள குறையை தான் தோனி சுட்டிக் காட்டினார். இதனை விமர்சிக்கும் உரிமை ரிச்சர்ட்சனுக்கு இல்லை. போட்டி முடிந்த பின் ஒருவர் கூறிய கருத்தை ஐ.சி.சி. பிரதிநிதி வீணாக விமர்சித்துள்ளார். இது உலகக் கிண்ணத் தொடர் நடக்கும் நேரத்தில், அந்த வீரருக்கு நெருக்கடி கொடுப்பதற்கு சமம்.


இவரது செயலை பி.சி.சி.ஐ. கண்டிக்கிறது. எதிர்காலத்தில் இவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது என இவருக்கு அறிவுறுத்த வேண்டும்.

யு.டி.ஆர்.எஸ். முறைக்கு பி.சி.சி.ஐ. தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இந்தத் தொழில்நுட்பத்தில் நிறைய குறைகள் உள்ளன. இவ்வாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011
பெப்ரவரி 19 - ஏப்ரல் 02
ICC Cricket World Cup 2011

# அப்ரிடி சுழலில் சுருண்டது கனடா பாகிஸ்தான் அணி 'ஹட்ரிக்' வெற்றி



(கொழும்பு)

கனடா அணிக்கு எதிரான லீக் போட்டியில் அணித்தலைவர் அப்ரிடி சுழலில் அசத்த, பாகிஸ்தான் அணி 46 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் இத் தொடரில் பாகிஸ்தான் அணி தொடர்ச்சியாக 3 போட்டிகளில் வெற்றிபெற்றது.

உலகக்கிண்ணத் தொடரில் நேற்று கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற 17ஆவது லீக் போட்டியில் ஏ பிரிவைச் சேர்ந்த பாகிஸ்தான்-கனடா அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பம் சொதப்பியது.

இதில் மொகமட் ஹபீஸ் 11 ஓட்டங்களுடனும் அகமெட் ஷேஷாட் 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

கடந்த போட்டியில் சிறப்பாக ஆடிய யூனிஸ்கான் 06 ஓட்டங்களுடனும் காம்ரன் அக்மல் 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 15.3 ஓவர்களில் 67 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களை யிழந்து தடுமாறியது.

இந் நிலையில் 5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த மிஷ்பா உல்ஹக்-உமர் அக்மல் ஜோடி நிதானமாக ஆடி ஆறுதல் அளித்தனர்.

இந்த ஜோடி 5 ஆவது விக்கெட்டுக்காக 73 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தபோது உமர் அக்மல் 68 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 48 ஓட்டங்களை எடுத்து அரைச்சதம் பெறும் வாய்ப்பை நழுவவிட்டார்.

அடுத்துவந்த அணித்தலைவர் அதிரடிகாட்ட மறுமுனையில் மிஸ்பா உல்ஹக் 68 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 37 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து அப்ரிடி 20, ரஷாக் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

பின்வரிசை வீரரும் வருவதும் போவதுமாக வேடிக்கைகாட்ட பாகிஸ்தான் அணி 43 ஓவர்களில் 184 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

பந்து வீச்சில் பைட்வான் 3 விக்கெட்டுக்களையும் சீமா, பாலாஜி ராவ், ஹான்ஸ்ரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஒசின்டே ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 155 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற எட்டக் கூடிய இலக்கை விரட்டிய கனடா அணிக்கு குணசேகரா 8 நிதிஷ்குமார் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சொதப்பினர்.

அடுத்துவந்தவர்கள் பாகிஸ்தான் சுழலில் சரணடைந்தனர். அப்ரிடி சுழலில் அணித்தலைவர் ஆஷிஸ் பகாஜ் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

சிறப்பாக ஆடி நம்பிக்கையளித்த ஜீபின் சர்காரி 27 ஓட்டங்களுடன் அஜ்மலின் சுழலில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

பின்வரிசையில் சீமா 4, ஹான்ரா 43 ஓட்டங்களுடனும் பைட்வான் பூச்சியத்துடனும் கோர்டன் 09 ஓட்டங்களுடனும் அப்ரிடி சுழலில் வெளியேறினர்.

அடுத்துவந்த பாலாஜி ராவ் அப்ரிடியின் சிறப்பான களத்தடுப்பில் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் ஒசின்டோ பூச்சியத்துடன் ஹகாப் ரியாஷின் வேகத்தில் ஆட்டமிழக்க கனடா அணி 42.5 ஓவர்களில் 138 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் 46 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி தொடரில் 3ஆவது வெற்றியைப்பெற்று 6 புள்ளிகளைச் சேர்த்து காலிறுதி வாய்ப்பை பிரகாசப்படுத்தியது.

பந்துவீச்சில் அணித்தலைவர் சகிட் அப்ரிடி 10 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்கள் மாத்திரம் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் அப்துல் ரசாக், உமர் குல், ஷகாப் ரியாஷ், அஜ்மல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப் போட்டியில் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த அணித்தலைவர் சகிட் அப்ரிடி ஆட்டநாயகனாக தெரிவானார்.

## புள்ளிப் பட்டியல்

### பிரிவு A

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| பாகிஸ்தான் | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | +1.747 |
| இலங்கை | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +2.663 |
| அவுஸ்திரேலியா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | +1.813 |
| நியூசிலாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | +1.507 |
| சிம்பாவே | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | +0.840 |
| கனடா | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -2.873 |
| கென்யா | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -4.825 |

### பிரிவு B

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| தென்னாபிரிக்கா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | +2.763 |
| இந்தியா | 2 | 1 | 0 | 1 | 0 | 3 | +0.870 |
| இங்கிலாந்து | 3 | 1 | 1 | 1 | 0 | 3 | +0.035 |
| மேற்கிந்தியத் தீவுகள் | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | +1.879 |
| அயர்லாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.207 |
| பங்களாதேஷ் | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.600 |
| நெதர்லாந்து | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -3.058 |

# அம்லா, டி வில்லியர்ஸ் சதம் தென்னாபிரிக்க அணி வெற்றி

(மொகாலி)

அம்லா, டி வில்லியர்ஸ் சதமடித்து அசத்த தென்னாபிரிக்க அணி 231 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நெதர்லாந்து அணியை வீழ்த்தியது.

பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் மொகாலியில் நேற்று நடைபெற்ற 16ஆவது லீக் போட்டியில் பி பிரிவைச் சேர்ந்த தென்னாபிரிக்க-நெதர்லாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நெதர்லாந்து அணித்தலைவர் போரன் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு அம்லா-சிமித் ஜோடி நிதானமான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி 12.5 ஓவர்களில் 51 ஓட்டங்களைச் சேர்த்த போது அணித்தலைவர் சிமித் 32 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 20 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக்களமிறங்கிய ஜக்கலிஸ் 2 ஓட்டங்களுடன் வந்த வேகத்தில் அரங்கு திரும்பினார்.

எனினும் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த அம்லா-டிவில்லியர்ஸ் ஜோடி அபார இணைப்பாட்டத்தை வழங்க தென்னாபிரிக்கா சரிவிலிருந்து மீண்டது.


இதில் ஹசிம் அம்லா 69 பந்துகளிலும் டி வில்லியர்ஸ் 48 பந்துகளிலும் அரைச்சதம் கடந்தனர்.

நெதர்லாந்து பந்துவீச்சை அடித்து விரட்டிய இந்தக் கூட்டணி ஓட்டங்களால் மழை பொழிந்தது.

இதில் ஹசிம் அம்லா 121 பந்துகளில் ஒரு நாள் போட்டி அரங்கில தனது 8 ஆவது சதமடித்தார்.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 29.2 ஓவர்களில் 221 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது ஹசிம் அம்லா 130 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 113 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய பிளேசிஸ் பொறுப்புடன் ஆட மறுமுனையில் டி வில்லியர்ஸ் 88 பந்துகளில் இத் தொடரில் இரண்டாவது சதத்தைப் பெற்றார்.



தொடர்ந்து அதிரடிகாட்டிய டி வில்லியர்ஸ் 98 பந்துகளில் (13 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக) 134 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

### டுமினி அதிரடி

தொடர்ந்து வந்த டுமினி அதிரடியாக ஓட்டங்களை சேர்க்க தென்னாபிரிக்க அணி 47 ஓவர்களில் 300 ஓட்டங்களை எட்டியது.

இதில் டுமினி 15 பந்துகளில் (2 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக) 40 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையிழந்து 351 ஓட்டங்களை குவித்தது.

இதில் டு பிளேசிஸ் 18 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார். பந்து வீச்சில் டோஸ்கற் 3 விக்கெட்டுக்களையும் லூட்ஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 352 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை விரட்டிய நெதர்லாந்து அணி தென்னாபிரிக்க அணியின் அபார பந்துவீச்சில் திணறல் ஆரம்பம் கண்டது.

இதில் கலிஸ் வேகத்தில் கேர்வேஜி 10 ஓட்டங்களுடனும் அடுத்துவந்த சுவப்பர் 9 ஓட்டங்களுடனும் வெளியேறினர்.

றொபின் பீற்றர்சன் சுழலில் ஜுய்டெரண்ட் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

சிறிது நேரம் தாக்குப்பிடித்த பார்ரேஸி 44 ஓட்டங்களை எடுத்து டுமினி சுழலில் ஆட்டமிழந்தார்.

அடுத்து மிகவும் எதிர்பார்க்கப்பட்ட டோஸ்சற் 11 ஓட்டங்களுடன் ஸ்ரையனின் வேகத்தில் வெளியேற நெதர்லாந்து அணி 27.5 ஓவர்களில் 100 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களை பறிகொடுத்தது.

பின்வரிசை வீரர்களை, இளம் பந்துவீச்சாளர் இம்ரான் தாகீர் சுழலில் பதம்பார்க்க நெதர்லாந்து அணி 34.5 ஓவர்களில் 120 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் 231 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி தொடரில் 4 புள்ளிகளைப் பெற்றது.

பந்துவீச்சில் இம்ரான் தாகீர் 3 விக்கெட்டுக்களையும் கலிஸ், பீற்றர்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன், டுமினி தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப் போட்டியில் தென்னா பிரிக்க அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த ஏ.பி. டி வில்லியர்ஸ் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

**நாளைய ஆட்டம்**
**இலங்கை எதிர் அவுஸ்திரேலியா**
நேரம்:- பி.ப 2.30
மைதானம்:- கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலையில் 17 வருடங்களின் பின் இடம்பெற்ற மீள்குடியமர்வை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைப்பதையும் மீள்குடியமர்வுக்காக காத்திருக்கும் மக்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.கரன்)

## காலி முகத்திடலை...

தேர்தலின்போது மகிந்த ராஜபக்ஷவின் பரப்புரை நடவடிக்கைகளுக்காகவே நான் அரச ஊடகநிறுவனத்திற்கு பரப்புரை வழங்கினேன். அது எனதுதனிப்பட்ட செலவு இல்லை.

அவ்வாறு எனது சொந்தச் செலவில் பரப்புரை நடவடிக்கையை மேற்கொண்டிருந்தால் அதற்கான ஆதாரத்தை அரசாங்கம் எனக்கு காட்டவேண்டும்.

அவ்வாறான ஆதாரங்கள் அரசாங்கத்திடம் இல்லை என்றால் என்னிடம் பகிரங்கமாக டளஸ் அழகப்பெரும மன்னிப்புக் கோர வேண்டும்.

காலிமுகத்திடலை அரசாங்கம் சீன நிறுவனம் ஒன்றிற்கு 99 வருட குத்தகைக்கு வழங்கியுள்ளது. சீன நிறுவனத்திற்கு வழங்கியுள்ள காலி முகத்திடலில் உள்ள பண்டார நாயக்கவின் சிலையும் அதே நிறுவனத்திற்கு அரசாங்கம் வழங்கியுள்ளதா?

எவ்வாறாயினும், காலிமுகத்திடலை தாம் எந்த நிறுவனத்திற்கும் விற்பனை செய்யவில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆனால் அப்பிரதேசத்தை தாம் விற்பனை செய்துள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஏற்கெனவே கூறியுள்ளார். இதனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அம்னேசியா நோய் ஏற்பட்டுள்ளது என அவர் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## இளம் குடும்பப்...

மனைவி உணவு எடுத்துச்சென்றதாகவும் அதன்போது வாகனத்தில் வந்த சிலர் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்து வவுனியா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## அமைச்சர் டக்ளஸ்...

இந்நிலையில் தனது பெயரை தேடப்படுவோர் பட்டியலிலிருந்து நீக்கக் கோரியும் முன் பிணை வழங்கக் கோரியும் உயர்நீதிமன்றத்தில் அவர் மனுத்தாக்கல் செய்திருந்தார். இவ்விரு கோரிக்கைகளையும் நேற்று உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளதுடன் நீதிமன்றத்தில் அவர் நேரில் சமுகமளித்து முன்பிணை பெறலாம் எனவும் அவரது பெயரை தேடப்படுபவர்கள் பட்டியலிலிருந்து அதுவரை நீக்கமுடியாது எனவும் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கைது செய்யக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் சட்டத்தரணி புகழேந்தி தாக்கல்செய்த மனு வை கடந்த டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி சென்னை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## நாட்டின் வளர்...

போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய நோர்வே தூதுவர் மேலும் கூறுகையில்,

இணையத்தளத்தினூடாக வரும் புதிய சந்தர்ப்பங்களுக்கு தொழில்சார் ஊடகவியலாளர் பல சவால்களை எதிர்நோக்குகின்றனர்.

எனினும் இணையத்தளங்களின் ஊடாக சமூக ஊடகவியலுக்கு ஏற்ற வகையில் ஊடகவியலாளர்களும் மாறவேண்டும். ஊடகத்துறையில் விமர்சனம் மிக அவசியமாகும். அதேவேளை விமர்சனங்கள் ஆக்க பூர்வமானதாக இருக்க வேண்டும்என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் 71 மாணவர்கள் சான்றிதழ் பெற்றதுடன் அச்சு துறையில் சிறந்த மாணவியாக மரியம் அஸ்வரும் வானொலி துறையில் சிறந்த மாணவியாக ஹர்ஸா ரூபரத்னவும் தொலைக்காட்சி துறையில் சிறந்த மாணவியாக ரூவானி கேஷியும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

NIRU TUITION CENTRE
KONDAVIL
Grade 4 - O/L
MATHS
MR. MAKENDERAN
MR. THEVAKUMAR
MR. SENTHILKUMARAN
MR. YASO
(3898)

## பூசாவில் உள்ள...

வாழ்வு அளிக்கப்படுதல் அவசியம் என்று குறிப்பிட்டிருந்தார்.

அதனைக் கவனத்திற்கொண்ட நீதிமன்றம் சந்தேகநபர்களை புனர்வாழ்வளிப்பதற்கு உரிய இடங்களுக்கு அனுப்புமாறும் அதன் பின் விடுதலைசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும் பூசா முகாம் பொறுப்பதிகாரிக்கு கட்டளையிட்டார்.

அவ்வாறு அனுப்பப்படவுள்ள ஆண்கள் நால்வரும் வவுனியா பூந்தோட்டம் முகாமிற்கும் பெண்கள் யாழ்ப்பாணம் தெல்லிப்பளை புனர்வாழ்வு முகாமிற்கும் அனுப்பப்படவுள்ளனர். (ச-5)

## யாழில் இடம்பெறும் இராணு...

எப்பட்டுவரும் இத்தகைய நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மனுதாரர்கள் சார்பில் இம்மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

படைத்தரப்பினரின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு தமிழ் அரசியல் கட்சிகளும் பொது அமைப்புக்களும் ஆட்சேபனை தெரிவித்த போதிலும் படையினர் இப் பதிவு நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுத்து வந்தனர்.

அத்துடன் வல்வெட்டித்துறையில் வசிக்கின்ற மக்களை குடும்பப் புகைப்படங்களுடன் தம்மிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும் என படையினர்காலக்கெடு விதித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

யா/திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
இல்ல மெய்வல்லுநர் போட்டி-2011
காலம்: 04.03.2011 (வெள்ளிக்கிழமை) இன்று
நேரம்: பிற்பகல் 2.00 மணி
இடம்: பாடசாலை மைதானம்
பிரதம விருந்தினர்
திரு.திருமதி E.S.P. நாகரட்ணம்
(தொழிலதிபர்)
சிறப்பு விருந்தினர்கள்
திருமதி ஞானசக்தி கணேசநாதன்
(விரிவுரையாளர், கல்வியியற்கல்லூரி, யாழ்ப்பாணம் - பழைய மாணவி)
திரு.தி.ஶ்ரீமோகனறாஸ்
(உரிமையாளர், தேனு களஞ்சியம், திருநெல்வேலி)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பா.அ.ச., ப.மா.ச.
(இ)

## போர்க் குற்றம் குறித்து...

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப்போரின்போது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்கு சுதந்திரமானதும், சுயாதீனமானதுமான பொறிமுறை ஒன்றை உருவாக்கவேண்டும் என அமெரிக்க செனட்சபை வலியுறுத்தியுள்ளது.

போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்கான இப் பொறிமுறையை இலங்கை, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச சமூகம் ஆகியன இணைந்து உருவாக்கவேண்டும் எனவும் அமெரிக்க செனட்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தின் செனட் உறுப்பினர் றொபேட் கெசேஸ் கடந்த முதலாம் திகதி இப் பிரேரணையை முன்மொழிந்தார். அவருடன் இணைந்து 11 ஏனைய செனட் உறுப்பினர்களும் இப்பிரேரணையை முன்மொழிந்தனர். இப்பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் உட்கட்டுமானம், மீள் குடியேற்றம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு அந்நாட்டில் நிலையான நீடித்த சமாதானம் நிலைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டியது முக்கியமானது.

இலங்கை அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கசப்பான அனுபவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாத வண்ணம் அமையும் வகையிலும் இனங்களுக்கிடையில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் அமைய வேண்டும். அத்துடன் போர் இடம் பெற்ற பகுதிகளுக்குச் செல்லவும், அங்குள்ள மக்களைச் சந்திக்கவும் ஊடகவியலாளர்களுக்கும், சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்களுக்கும் இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் எனவும் இப்பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

Used Computers & Accessories For Sales
Used System
P4 2.8GHz
Intel Mother Boarc
512 MB RAM
80GB HDD
ATX Power Supply
DVD Rom
Rs. 13,000/=
6 Months Warranty
P4 1.6 GHz
Intel Mother Board
256 DDR RAM
20GB HDD
ATX Power Supply
CD Rom
Rs. 5,900/=
6 Months Warranty
Mother Board (478)
2.8 Supported
On board VGA,
Sound
Rs. 3900/=
512 DDR1 RAM Rs. 2500/=
(1 Year Warranty)
Web Cam Rs.1500/= - 1800/
Used 15" LCD - 5000/=,
17" - 8000/=
New 15.6 LCD - 9,800/=
(3 Years Warranty)
New Laptops
HP 420(Core2Duo) - Rs.56,000/=
Hp 620(Core2Duo) - Rs.62,000/=
Hp CQ62(corei3) - Rs.69,000/=
Acer5741(corei3) - Rs.64,000/=
1 Year Warranty
ASK Computers
No:50, Chetty Street Lane, Nallur,Jaffna
Tel : 077 135 0476 / 021 300 8960

April Intake / காலடியில் எமது கல்லூரி
Study in UK
* IELTS அவசியமற்ற லண்டன் / UK பயணம்.
* Sponsor வசதிகள் மிகக் குறைந்த விலையில்- 130,000/=
* 2 விதிமுறைகளில் உருவாக்கப்பட்ட ஒரு திட்டம்
I. விசாக்கு முன் கட்டணம்.
II. விசாக்குப் பின் கட்டணம்.
* Course Fees குறைந்த விலையில்- 2500£
* UKல் 20 கல்லூரிகளுக்கு மேற்பட்ட தொடர்புகள்.
* வட மாகாண மக்களின் நம்பிக்கை மிக்க தெரிவு.
தொடர்பு:- European College of higher Studies
315 1/2, Parameshwara Junction,
Palaly Road,Jaffna.
Tel: 0213734747,0776327623, 0773537378
(C-2583)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org